விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 ஆவணி 28 ஜுலகல் 24 இதழ் 212

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 13—9—82

நாளை A/L 83
DAY CLASSES
கலை, வர்த்தகம்
ஆரம்பம்: நாளை மு. ப. 8மணி
**ISLAND**
(விகாரை எதிரில்)
ஸ்ரான்லி வீதி-யாழ்.நகர்
4511

## சீன கம்யூனிஸ்ட் தலைவர் நீக்கம்

பீக்கிங், செப் 12

ஆளும் அரசியல் தலைமைப் பீடத்திலிருந்து சீனாவின் முன்னாள் தலைவர் திரு குவா-குவா பெங்கை நீக்குவதென்று சீன கம்யூனிஸ்ட்கட்சியின் மத்திய குழு தீர்மானித்துள்ளது.

## விளையாட்டுத் துறை பல்கலைக்கழகம்

(கொழும்பு)

விளையாட்டுத்துறைக்கான பல்கலைக்கழகமொன்று அடுத்தாண்டு ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். (வெ)

★ பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதான

# 13 தமிழர் பனாகொடை முகாமில் உண்ணாவிரதம்!

## ஜனாதிபதிக்கு மகஜர்

### சட்டத்தரணிகள் சந்திப்பு: உயர்நீதிமன்ற கவனத்துக்கு இன்று கொண்டுவரப்படும்

(கொழும்பு)

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பனாகொடை இராணுவமுகாமில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இருபத்து ஏழு தமிழர்களில் (இளைஞர்கள் உட்பட) பதின்மூன்றுபேர், உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளனர்!.**

**இவர்களின் உடல்நிலை இப்பொழுது கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

### நான்கு நாளாக உண்ணாவிரதம்

தடுப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கும் 27 தமிழர்களும், தங்களுக்கு வழங்கப்படவேண்டிய பல சலுகைகள் மறுக்கப்பட்டுள்ளதாக தடுப்பு முகாம் பொறுப்பதிகாரிக்குத்தெரிவித்திருந்தபோது அவர் அவற்றை வழங்கமுடியாதென நிராகரித்து விட்டாராம்.

அதைத் தொடர்ந்து அந்த 27 பேரும் கடந்த வியாழக்கிழமை இரவு தொடக்கம், தமது கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதமிருக்கத் தொடங்கினர். நேற்று முன்தினம் சனிக்கிழமை உண்ணாவிரதமிருந்தவர்களில் 14 பேர் சுகவீனமடைந்து காணப்பட்டதால், சட்டவைத்திய அதிகாரியின் ஆலோசனைப்படி உண்ணாவிரதத்தைக்கைவிட்டனர், ஆனாலும் மிகுதி 13 பேரும் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும்வரை உண்ணாவிரதமிருக்கப்போவதாகத்தெரிவித்தனராம்.

இவர்களின் கோரிக்கைகள் வருமாறு:

★ "நாளாந்தம்மேற்கொள்ளும் உடற்பயிற்சிக்கு தங்களை அனுமதிப்பதில்லை.

★ "தினசரி குளிப்பதற்கு வசதியில்லை.

★ "சவர்க்காரம், பற்பசை வழங்கப்படுவதில்லை.

★ "வெளிநாடுகளிருந்து வரும் அறிவு வளர்ச்சிப் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

★ "போதிய உணவு வழங்கப்படுவதில்லை.

★ "தமது குடும்பத்தினருடன் கடிதப் போக்குவரத்துச் செய்யமுடிவதில்லை.

[8ம் பக்கம் பார்க்க]

## அரசியல் பிரமுகர்கள் ரயில்விபத்தில் பலி!

புதுடில்லி, செப். 12

பஞ்சாப்பில் இடம்பெற்ற ரயில்-பஸ் விபத்தில் 32 அரசியல்வாதிகளும் 2 பொலிசாரும் பலியாகினர்.

தடையைமீறி ஆர்ப்பாட்டம் நடத்தியபோது கைதுசெய்யப்பட்ட அகாலிதள் கட்சியைச் சேர்ந்த 54 பேரை பஸ்ஸில் ஏற்றிச் சென்றபோதே இவ்விபத்து ஏற்பட்டது. 19பேர் பலத்த காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அமிர்த சரஸுக்கு 15 கிலோ மீட்டர் தொலைவில் பாதுகாப்பற்ற கடவையிலேயே இவ்விபத்து ஏற்பட்டது. (இ-வெ)

## விமானவிபத்து: 44 பேர் பலி!

### மே. ஜெர்மனியில் சம்பவம்

பொன், செப். 12

விமானப்படை கண்காட்சியில் கலந்துகொள்ளச் சென்ற அமெரிக்க ஹெலிகொப்டர் விமானம் ஒன்று விழுந்து நொருங்கியதை அடுத்து அவ்விமானத்தில் சென்ற 44 பேரும் பலியாகினர்.

விமானப்படை கண்காட்சியில் சாகஸ விளையாட்டுக்களைச் செய்துகாண்பிக்கச் சென்ற 39 பரசூட் வீரர்களும் பலியானவர்களில் அடங்குவர்.

மேற்கு ஜெர்மனியில் இப்பயங்கர சம்பவம் இடம்பெற்றது. (இ)

### இரண்டுமாத இடைவெளியின்பின்

## மட்டக்களப்பு அபி. சபை இன்று கூடுகிறது!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டஅபிவிருத்திச்சபை இரண்டுமாத இடைவெளியின் பின்பு மீண்டும் இன்று திங்கட்கிழமை காலை தலைவர் திரு சி. சம்பந்தமூர்த்தி தலைமையில் கூடவிருக்கின்றது.

கடந்த ஜுலை மாதம் நடைபெற்ற அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் தலைவர் திரு. சி. சம்பந்தமூர்த்திக்கும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகத்திற்குமிடையே ஏற்பட்ட கருத்துமோதலில் அமைச்சர் தேவநாயகம் அபிவிருத்தி சபை வெறும் கைப்பொம்மை தலைவருக்கு அதிகாரமில்லை. என கூறியதையடுத்து தலைவர் இடையில் கூட்டத்தை இடைநிறுத்தம் செய்துவிட்டு வெளியேறினார்.

இதன் பின்பு அமைச்சர் தேவநாயகம் தன் கூற்றை வாபஸ் பெற வேண்டும் அல்லது அரசாங்கம் அமைச்சரின் கருத்தை மறுக்கவேண்டும். அதுவரை சபைக்கூட்டம்நடை

(8-ம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்ட இளைஞர் வேலைவாய்ப்பு:

## அபி. சபைத் தலைவர், எம்.பி.க்கள் ஆலோசனை செய்வர்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்திலுள்ள படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் அளிப்பது குறித்து, யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசாவுடன், யாழ். மாவட்ட எம். பிக்கள் ஆலோசனை நடாத்த உள்ளனர்.

இம் மாதம் 16ம் திகதி யாழ். செயலகத்திலுள்ள அபிவிருத்தி சபைத் தலைவரின் அலுவலகத்தில் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட வேலைகள் குறித்தும்

(8-ம் பக்கம் பார்க்க

## ரூ. 9000பொருட்கள் திருட்டு

[யாழ்ப்பாணம்]

வீட்டுக்கதவை உடைத்துச் சென்ற திருடர்கள் சுமார் 9ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

அளவெட்டி வடக்கைச் சேர்ந்த மங்கையர்க்கரசி அருணாசலம் என்பவர் வீட்டிலேயே

[8-ம் பக்கம்பார்க்க]

COMPUTER
PROGRAMMING COURSE - 2
Commencing on Saturday 18th September 1982
Languages Taught:- Basic and Cobol.
CONTACT
REGISTRAR,
Patrician Institute
59, ST. PATRICK'S ROAD, JAFFNA. (4510)

நல்லூர் - வீடு - விற்பனைக்கு
கச்சேரி நல்லூர் ரேட்டில் முத்திரைச் சந்தைக்கு அண்மையில் 3 பரப்புக் காணியில் கிணற்றுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 54, Hamer's Avenue, வெள்ளவத்தை, கொழும்பு. போன்: 588590. (4507

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புனரமைக்கப்பெற்ற C 90, C 70. C 50, CD 125 மோட்டார் சைக்கிள்களும் Delica 1979 மொடல் வானும் விற்பனைக்குண்டு. மற்று எந்த விதமான வாகனமும் குறைந்த விலையில் நேரடியாகத் தருவித்துக் கொடுக்கிறோம். நா சாம்பசிவம் அன் கோ, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
4453

### தேவை

பஸ் லைசென்ஸ்சும் மோட்டார் சைக்கிள் லைசென்சும் உடையவரும் கடைவேலைகள் செய்யக்கூடியவரும் தேவை 55 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பிக்க. விளம்பர இல 4508, மே/பா. ஈழநாடு. யாழ்ப்பாணம். 4508

### பயிற்சி

வெல்டிங், வயறிங், மோட்டார் இயந்திரவியல் செய்முறை அறிமுறையுட்பட 19—9—82 இல் ஆரம்பம். C. E. T , ஜலண்ட் இன்ஸ்ரிரியூட், (விகாரைக்கு எதிரில்) 58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 4495

### கோலப்போட்டி 1982

யாழ்ப்பாணம் சைவ மகளிர் மன்றம் நவராத்திரி விழாவை முன்னிட்டு நடாத்தும் அகில இலங்கை ரீதியிலான கோலப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 10—10—1982 தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்கவேண்டிய விலாசம்:

திருமதி
தை.கருணானந்தன்
74, சிவகுருநாதர் வீதி,
யாழ்ப்பாணம்
4495

### இடைக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை
மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் சுயகிந்த சிங்கராஜர் டேவிட் அவர்களின் மரணசாதன விடயமாக.

இறந்தவர்.

மரணசாதன )
நியாயாதிக்கம் ) இல: 1146/
Testy

தும்பளை. லோறன்ஸ்
மரியதாஸ் பிலிப்நேரி
மனுதார்.

மேலேயுள்ள இலககங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச் சொத்தை நிருவாகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க இடைக்கட்டளை பற்றிய கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8-ம் திகதி முறபகல் 9 மணிக்கு இம்மன்றில முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டபின் இடைக்கட்டளை ஏன் முற்றான தாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றீர்.

27-8-82
வரைவு

• மன்றத்தின் கட்டளைப்படி
க. செல்வரத்தினம்
பதிவாளருக்காக

மனுதாரின் சட்டத்தரணி
4486

# 'எங்கோ இருந்து பிரகடனம் செய்தால் தமிழ்ஈழம் மலர்ந்துவிடுமா?

## 35 ஆண்டு தீவிர போராட்டம் நடத்திய பாலஸ்தீன இயக்கம் தனிஅரசை நிறுவி விட்டதா?

## எதிர்க்கட்சித் தலைவர் 'அமிர்' கேட்கிறார்

[பண்டத்தரிப்பு]

"இன்று ஒரு சில நாச சக்திகள் குளத்தைக் கலக்கி பருந்திற்கு இரை கொடுப்பதுபோல அற்ப சுயநலத்திற்காக தவறான பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றன எங்கோ இருந்து ஒரு தமிழ்ஈழப் பிரகடனத்தை செய்துவிட்டால் இங்கு தமிழ் ஈழம் மலர்ந்துவிடுமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். 35 வருடங்களாக தீவிரப் போராட்டம் நடாத்தி வரும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினல் அங்கே ஒரு அரசாங்கத்தை நிறுவ முடியவில்லை மந்திரத்தால்மாங்காய் விழுத்த முடியுமா?"

இவ்வாறு பனிப்புலம் அம்பாள் சனசமூகநிலைய, கிராம முன்னேற்றச் சங்க 36-வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயல் அதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

சங்கத் தலைவர் ஆசிரியர் திரு.வ சுப்பிரமணியம் தலைமையில்நடைபெற்ற இவ்விழாவில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

"எனது அரசியல் வாழ்வுடன் பின்னிப் பிணைந்துள்ள இக்கிராம மக்களை நாம் என்றும் மறந்துவிட முடியாது. 1952-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் முதல்தடவையாக நான் போட்டியிட்டபோது எனது முதல் பிரசாரக் கூட்டம் இக்கிராமத்தில்தான் நடந்தது. ஒற்றுமைமூலம்தான் எதையும் சாதிக்கலாம் என்பதை நன்கு உணர்ந்து இக்கிராம மக்கள் ஒன்றுபட்டு தமது கிராம வளர்ச்சிக்காகப்பாடுபடவேண்டும்.

"விடுதலையை நாடி நிற்கும் நாம் முதலில் எமது உட்பலத்தை அதிகரிக்கவேண்டும். வெளிநாடுகளிலும் தீவிர பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இன்று தமிழ்நாட்டில் எமக்காக குரல் கொடுக்கவும், போராட்டங்கள் நடாத்தவும் பலஇயக்கங்கள் முன்வந்திருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணி மூலம் நாம் இங்குஉருவாக்கியஒற்றுமையே இதற்குக் காரணமாகும்.

"வெளிநாடுகளில் எமது நிலையை எடுத்துக்கூறி பிரச்சாரம் செய்யும் வாய்ப்புக்களை நாம் நன்கு பயன்படுத்திவருகின்றோம். கடந்த பொதுத் தேர்தலில் காட்டிய ஒற்றுமையினால்தான் இதனை நாம் சாதிக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்த ஒற்றுமையைசிதறடித்து எம்மிடையே பிளவுகளை ஏற்படுத்தவும் இளைஞர்களை தவறான வழியில் இட்டுச்செல்லவும் சிலர் பிரசாரத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இதனையிட்டு எமது மக்கள் மிகவும் கவனமாகவும் விழிப்பாகவும் இருக்கவேண்டும்."

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைஉறுப்பினர்திரு.ச பூபாலசிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

"எமது பகுதியிலுள்ள சங்கானைப் பொலிஸ் நிலையம் மூடப்பட்டதால் பல மைல் தூரமுள்ள காங்கேசன்துறை பொலிஸ்நிலையத்திற்குசென்று பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இப்பகுதி மக்கள் முறைப்பாடுகளைச் செய்யவேண்டியுள்ளது. கிராம அபிவிருத்திச் சங்கங்கள் தமதுபகுதியில்இணக்க சபைகளை அமைத்து அதன் மூலம் மக்களிடையே ஏற்படும் சிறு சிறு சச்சரவுகளையும் பிணக்குகளையும் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்."

யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபையின் மற்றுமொரு உறுப்பினரான திரு.சு நடேசு உரையாற்றுகையில் தமிழினத்தின் ஒற்றுமையிலும் கட்டுக்கோப்பிலும்தான் எதிர்கால முன்னேற்றம் பெரிதும் தங்கியுள்ளது என்றும் எமது தலைவர்கள் காட்டும் பாதையில் செல்வதே சுபீட்சத்திற்கு ஏற்றவழி என்றும் குறிப்பிட்டார்.

சங்கானை ப. நோ. கூ.சங்கத் தலைவர் திரு. செ. தங்கராசா சங்கானைமேற்கு கிராமசேவை அலுவலர் திரு க. கமலநாதன் ஆகியோரும் இவ்விழாவில் உரைநிகழ்த்தினர்கள். இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (ஓ)


**DUBAI**

**Vacancies for Female Housemaids, Nannies, Cooks, Baby Sitters**

Age : 18—30 yrs. 2 Years Contract
Salary 150 US Dollars—Rs. 3100/—
Free Food, Medical and Accomodation
ENGLISH KNOWLEDGE PREFERRED
3 PASSPORT SIZE PHOTOS
2 COPIES OF PASSPORT DETAILS
BIO DATA WITH DUPLICATES

AL HAMRA ENTERPRISES
C/o A Ratnasabapathy,
45, Ambalavanar Road,
Jaffna.
4497

Labour Licence No. 188
Ref No: FE/6/
MEA/447/2626


## அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை செவ்வாய்க்கிழமை மடதருமத்தின் ஏக தருமகர்த்தா என்ற முறையில் நாகலிங்கம் செட்டியார் முத்துவேலுச் செட்டியார், கஸ்தூரியார் வீதி, ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

மனுதார்

வழக்கு இலக்கம்: ந. சொ. 80

எதிராக

1. வல்லிபுரம் அம்பலம் அல்லது அம்பலவாணர்
2 வல்லிபுரம் முத்துலிங்கம்
3 வல்லிபுரம் வைத்திலிங்கம்
4. நாகலிங்கம் பாலசுப்பிரமணியம்
5 இராசரத்தினம் மகள் கமலேஸ்வரி
6. சின்னத்தம்பி சண்முகம் எல்லோரும் சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்
7. இராசநாயகம்பிள்ளை மரியாம்பிள்ளை. சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம்

எதிர்வாதிகள்

இதன்பின் விபரிக்கப்படுமாதனத்தை அவ்வாதனத்தில் நெடுங்காலமாகக் குடியிருந்து வருபவர்களாகிய மேற்சொல்லப்பட்ட எதிர்வாதிகளுக்கு அவரவர் குடியிருந்து பாகங்களை அறுதிவிற்பதற்கு நீதிமன்றத்தின் அனுமதியை மேற்சொல்லப்பட்ட மடதருமத்தின் ஏகதருமகர்த்தா என்ற முறையில் மேற்சொல்லப்பட்ட மனுதார் நீதிமன்றத்திடமிருந்து கோரியுள்ளார் ஆகையால்,

1982-ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 24-ம் திகதி முற்பகல் 9 மணிககு முன்னர் போதிய எதிர்க்காரணம் காட்டப்பட்டாலன்றி நீதிமன்றக்கட்டளை மூலம் இதன்பின் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தின் பாகங்கள் அதில் குடியிருந்து வரும் மேற்சொல்லப்பட்ட எதிர்வாதிகளுக்கு அறுதி விற்கப்படும என்பதை இத்தால் அறிந்துகொள்ளுமாறு யாவரும் வேண்டப்படுகிறார்கள்.

### மேற்சொல்லப்பட்ட ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை வடமேற்கு இறை சோனகன் தறையும் வெங்கிட்டியான் தோட்டமும் நொச்சிப்பள்ளமும் பராயடியும் ஆட்சிப்படி நி. பர. 12. ஆனல் 27-7-82ல் உத்தரவுபெற்ற உலாந்தா சி. இராசகாரியர் அவர்களால் 3506-ம இலக்கத்தில் தயாரிக்கப்பட்ட படத்தின்படி நி. பர. 11 குளி 14 06. குறித்த படத்தில் இக்காணி 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9-ம் துண்டுகளாகக் காட்டப்பட்டுள்ளது. கட்டடங்களும் கிணறும் மலசலகூடமும் எல்லை கிழக்கு விடத்தல்தீவுப் பிள்ளையார் கோவிலுக்கும் வல்லிபுரம் நமசிவாயத்துக்கும் பெண் விசாலாட்சிக்கும் உரியவாதனங்கள் வடக்கு சட்டநாதர் கோவில் ஆதனம். மேற்கு மாரிமுத்து கனகரத்தினத்தின் காணி. தெற்கு அரசாங்க நிலமும் ரோட்டும், இதடங்கலும்.

(நாகலிங்கம் செட்டியார்
முத்துவேலுச் செட்டியார்)
ஏக தருமகர்த்தா,
செவ்வாய்க்கிழமை மடதருமம்.

தயாரித்தது:
சு. அம்பலவாணர்
மனுதாரின் சட்டத்தரணி.
4338

## அடிக்கல் நாட்டினர்

(அரியாலை)

பரந்தன் நவஜீவனத்தில் மோட்சபிரயாணியின் ஆயத்த ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டுவைபவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது தோட்டப்பண்ணை முன்னாள் தொழிலதிபர் திரு. சிறில் இராசாமுத்துக்குமார் அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

நவஜீவன நிர்வாகத் தலைவர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவம் யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் ஆருட்திரு சாம் டி ஹோரிங்டன் அடிகளாரின் ஜெபத்துடன் ஆரம்பமாகியது. நவஜீவனத் தலைவர் அருட்திரு ஏ. சி தப்பிராசா அடிகளார் வரவேற்புரை நிகழ்த்துகையில் வயோதிபர்கள் தமது இறுதிக்காலத்தைச் சுகபலமாக நடாத்தி மோட்ச பிரயாணத்துக்கு ஆயத்தம் செய்யும் ஆலயமாக இந்த ஆலயம் அமையும் என்று குறிப்பிட்டார், (அ)

சாவகச்சேரி

## இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா.

[சாவகச்சேரி]

சாவகச்சேரி இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா அக்டோபர் மாதம் 1-ம் திகதி பிற்பகல் கல்லூரித் திறந்த வெளிஅரங்கில் நடைபெறவிருக்கின்றது.

இந்த வைபவத்திற்குப் பிரதம விருந்தினராக யாழ். கல்வித்திணைக்கள கல்வி அதிபதி திரு சிமியாம்பிள்ளை கலந்து கொள்கிறார்.

திருமதி சிமியாம்பிள்ளை பரிசில்களை வழங்குவார். புதிய நியமனத்தைப் பாராட்டி திரு. திருமதி சிமியாம்பிள்ளைக்குத் தேநீர் விருந்து வைபவமும் நடைபெற இருக்கின்றது,

(க)

## கனகபுரத்தில் மாதிரிக் கிராமம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கனகபுரத்தில் மாதிரிக் கிராமம் ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான இடத்தைக் கிளிநொச்சி எம். பி. திரு. வீ. ஆனந்தசங்கரி தெரிவுசெய்துள்ளார்.

(க)

# அமெரிக்காவில் வன்செயல்களினால்

# 81-ல் 25 ஆயிரம்பேர் உயிரிழந்தனர்

## பீதியுடன் வாழும் பெண்களுக்கும் வயோதிபருக்கும்

## பாதுகாப்பளிக்க அதிபர் ரீகன் சங்கற்பம்

வாஷிங்டன், செப். 12 அமெரிக்காவில் வன்செயல்களினாலும் குற்றச் செயல்களினாலும் கடந்த ஆண்டு 25 ஆயிரம்பேர் உயிரிழந்துள்ளனர். 880 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலை நீடிக்க அரசு இனிமேலும் அனுமதிக்காது.

இவ்வாறு அமெரிக்க அதிபர் திரு றொனல்ட் ரீகன் தெரிவித்துள்ளார்

நாட்டுமக்களுக்கு திரு ரீகன் ரேடியோ மூலம் ஆற்றியஉரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வன்செயல்களினாலும்குற்றச் செயல்களினாலும் அமெரிக்காவின் மூன்றில் ஒரு குடும்பத்தினர் நிர்க்கதியாகியுள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்களினால் பீதியுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கும் வயோதிபர்களுக்கும் உரிய பாதுகாப்பு அளித்து நாட்டை பாதுகாப்பான இடமாகமாற்ற அரசு சங்கணம் கட்டியுள்ளது [இ]

## புதிய ஸ்டேட் அமைச்சர்கள்

புதுடில்லி, செப். 12 இந்திய மத்திய அமைச்சரவையில் 4 ஸ்டேட் அமைச்சர்களும், துணை அமைச்சரொருவரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். [வெ]

## தொகுதி நிதிபற்றி ஆராயக் கூட்டம்

(வேலணை)

ஊர்காவற்றுறைத் தொகுதியில் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட இவ்வாண்டுக்கான பணம் எவ்வாறு செலவு செய்யப்பட்டது மிகுதி செலவு செய்யப்படாதது ஏன் இதற்கான காரணங்களை ஆராய்வதற்கான கூட்டமொன்று நாளை செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தலைமையில் வேலணை உதவி அரசாங்க அதிபரின் பணிமனையில் நடைபெறவிருக்கின்றது

இக்கூட்டத்தில் வேலணை உதவி அரசாங்கஅதிபர் திரு. ஏ. சி. நாகராசா, ஊர்காவற்றுறை உதவிஅரசாங்க அதிபர் திரு. சி பாலரட்டினம் உட்பட தீவுப்பகுதியில் உள்ள அரசாங்க உயர் அதிகாரிகளும் கலந்துகொள்ள விருக்கின்றனர். (இ)

## மத்திய கிழக்கில் அமைதி

# றீகனின் திட்டம் உடன் அமுல் செய்யப்படவேண்டும்

## அரபு நாடுகளின் அமைதித் திட்டம் நடைமுறைச் சாத்தியமற்றது

### பாரிஸில் எகிப்திய அதிபர் கருத்து

பாரிஷ், செப். 12 மத்திய கிழக்கு அமைதிக்கான தமது திட்டத்தை அமுல் செய்யவேண்டிய நடவடிக்கைகளை அமெரிக்க அதிபர் திரு. றெனல்ட் றீகன் உடன் மேற்கொள்ளவேண்டும்.

ஜெரூஸலத்தைதலைநகராகக் கொண்ட பாலஸ்தீனதனிநாடு ஒன்றை அமைக்கும் அரபுநாடுகளின் திட்டம் நடைமுறைச் சாத்தியமற்றது.

இவ்வாறு எகிப்திய அதிபர் ஜனுப் ஹொஸ்னி முபராக் பாரிஸில் பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்தார்.

பாரிஸில் பிரான்ஸ் அதிபர் திரு. மிட்டராண்டை சந்தித்து பேச்சு நடத்திய பினனரே அவர் பத்திரிகையாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத்தியகிழக்கில் அமைதியை ஏற்படுத்தும் விஷயத்தில் எகிப்தும் பிரான்ஸும் ஒரே கொள்கையைத்தான்கொண்டுள்ளன என்றும் ஜனுப் முபராக் தெரிவித்தார்.

## லெபனனுடன் சமாதான ஒப்பந்தத்துக்கு இஸ்ரேல் விருப்பம்

ஜெரூஸலம், செப். 12 லெபனனுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள இஸ்ரேல் விருப்பம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய சிரேஷ்ட அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

லெபனனுடன் இஸ்ரேலுக்கு விரோதம் கிடையாது. அந்நாட்டுடன் நட்புறவுடன் இருக்கவே இஸ்ரேல் விரும்புகிறது என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளையில் பாலஸ்தீன விடுதலை இயக்க வீரர்கள் லெபனனிலிருந்து வெளியேறுவதைக் கணகாணிக்க பெய்ரூட் வந்திருந்த பிரான்ஸ் சமாதானப் படைகள் நாடு திரும்பியுள்ளன. [இ]

## துணுக்காயில் கடும் வறட்சி: மக்களும் கால்நடைகளும் அவதி

[துணுக்காய்]

துணுக்காய்ப் பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு கடும் வரட்சி நிலவிவருவதால் இப்பகுதிமக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்துவருகிறார்கள். வவனிக்குளம், யோகபுரம், மல்லாவி கல்விளான், கோட்டைக்கட்டியகுளம், அம்பலபெருமாள்குளம் ஆகியகிராமங்களே கடும் வறட்சிக்கு இலக்காகியுள்ள கிராமங்களாகும்.

கிணறுகள் எல்லாம் தண்ணீர்வற்றிக் குடிப்பதற்கே தண்ணீர்இன்றிமக்கள் கஷ்டப்படுகின்றனர். குளங்கள் எல்லாம் வறட்சியால் காய்ந்து காணப்படுகின்றன.

கால்நடைகள் நீர் தேடி அலையும் காட்சி கண்ராவியாகும். தொடர்ந்து வறட்சியும் வெப்பமும் நிலவுமானல் இப்பகுதியில் வெப்பநோய் ஏற்படலாமென்று மக்கள் அஞ்சுகின்றனர். (அ)

## தெல்லிப்பளை ப. நோ. கூ. ச.

## சிறந்ததொழிற்பாட்டையுடைய மகளிரைப் பெற்றுள்ளது

[யாழ்ப்பாணம்]

''வர்த்தலைவிளான் மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்டம் சகலதுறைகளிலும் முன்னின்றுநற்பணிகளை ஆற்றி வருகின்றது இந்தவகையில் உலக கற்றல்தின விழாவையும் கொண்டாடுவதன் மூலம் ஏனையவர்களுக்கு கற்றலின் மகத்துவத்தை எடுத்துக்காட்டியிருக்கின்றனர்''

இவ்வாறு தெல்லிப்பழை பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத் தலைவரும் வலிகாமம் வடக்குப்பி தேச சபைத்தலைவருமாகிய திரு. சி சிவமகாராசா வர்த்தலைவிளான் மகளிர் பாவனையாளர் தகவல் கல்வித் திட்டத்தினரால் கல்வித்திட்ட மண்டபத்தில் கொண்டாடப்பட்ட விழாவில் கூறினர். இவ்விழாவிற்கு திருமதி இ. செகரத்தினசிங்கம் தலைமை தாங்கினர்.

அன்று மாலை பாலர்பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களையும், நாடகப் போட்டி, இசைப்போட்டி ஆகியவற்றுக்கான பரிசில்களையும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட திரு த. தம்பிராசா வழங்கினர்.

பாலர்பாடசாலை ஆசிரியை செல்வி யோகேஸ்வரி இராமசாமியின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகிய இவ்விழாவில் அவர்தொடர்ந்தும் உரையாற்றுகையில் சிறந்த தொழிற்பாட்டையுடைய மகளிர் அங்கத்தவர்களைப் பெற்றிருப்பதில் தெல்லிபழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பெருமையடைகிறது என்றார்.

மகளிர்குழுத்தலைவி திமதி. சகிதேவி கந்தையா அதிபர் திரு. சி. சின்னத்தம்பி திரு. க. கருணாகரன் ஆகியோரும் இவ்விழாவில் உரையாற்றினர் செயலாளர் குகவதி மாணிக்கவாசகர் நன்றி கூறினர்.

## உரும்பராய் கருணாகரர் ராஜகோபுரம்

# ஒரு நாளில் லட்சம் ரூபா சேர்ந்தது

(உரும்பராய்)

''ஊருக்கு அழகுதருவன கோயில்கள் கோயில்களுக்கு அழகுதருவன கோபுரங்கள் கோபுரதரிசனம் கோடிபுண்ணியம் என்பார்கள் தூலலிங்கமாகிய கோபுர வழிபாட்டின் இன்றியமையாமையை நூல்கள் பல எடுத்துரைக்கின்றன. கருணாகரப்பிள்ளையார் ஆலயத்துக்கு இராஜகோபுரம் அமைய இருப்பது சைவ மெய்யடியார்களுக்கெல்லாம் பெரு மகிழ்ச்சி தருவதாகும்''.

உரும்பராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் இராஜ கோபுரத்திருப்பணி அங்குரார்ப்பண விழாவில்பேசிய ஆலயதிருப்பணிச் சபையின் காரியதரிசி அ. பஞ்சாட்சரம் மேற்கண்ட்வாறு குறிப்பிட்டார்.

கருணாகரப் பிள்ளையார் ஆதீன முதல்வர் சிவாசாரிய மணி சிவஸ்ரீவை சபாரத்தினக்குருக்கள் கருணாகரப் பிள்ளையாருக்கு விசேட பூசையை நிகழ்த்தி, விபூதிப் பிரசாதம் வழங்கி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள்.

இளைப்பாறிய ஓவசியர் திரு. அ நல்லதம்பி இராஜகோபுரத் திருப்பணிக்கான நிதிசேர்க்கும் வைபவத்தை முதலில் ஆரம்பித்துவைததார். அதனையடுத்து அடியார்கள் பலரும் தமது பேராதரவை முழுமனதோடு நல்கிதிருப்பணிநிதியை இலட்ச ரூபாவரை வளரச் செய்தனர்.

பூர்த்தி நிகழ்ச்சியாக சிவஸ்ரீ ச.பரமேசுவரக்குருக்கள்இராஜ கோபுரத் திருப்பணியின் மகிமை பற்றி உரையாற்றினார்கள். (அ)

## ''வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதில்

# இல்லத்தரசிகளின் பங்கு மகத்தானது''

### -மன்னார் அரசஅதிபர்

[மன்னார்]

''வளர்ந்துவரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதில் இல்லத்தரசிகளின் பொறுப்பு மகத்தானதாகும் இல்லத்தில் இருந்துகொண்டே அவர்களாற்றும் மிகச் சிறிய பணிகள் கூடக் குடும்பத்தலைவர் ஒருவருடைய சுமையை மிகப்பெரிய அளவுக்குக் குறைத்துவிடக்கூடியனவாகும். குடும்பத்தினர்களுக்குத் தேவையான ஆடைவகைகளைத் தயாரிப்பதில் அவர்கள் தேர்ச்சி பெற்றிருப்பதன் மூலம் கணிசமான அளவுக்கு அவர்கள் பணத்தையும், துணியையும் மீதப்படுத்தி கொள்வது சாத்தியமானதாகும்.''

இலுப்பைக்கடவையில் மாதர் அபிவிருத்திச் சங்கம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துத் தையற் பயிற்சி வகுப்பொன்றினையும் அங்கு ஆரம்பித்து வைத்துப் பேசிய மன்னார் அரசாங்க அதிபர் திரு டி வாமதேவன் தமது உரையின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலுப்பைக்கடவைக் கிராமோதயசபைத் தலைவர் திரு. சி. சண்முகலிங்கத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பித்த பிரஸ்தாப வைபவத்துக்கு மாந்தை உதவி அரசாங்க அதிபர் திரு. முருகையா தலைமை வகித்தார். வைபவத்தில் தொடர்ந்து பேசிய அரசாங்க அதிபர், பிரமுகர்களில் பலர் ஒன்றுகூடி நிலையங்கள் சிலவற்றைக் கோலாகலமாகத் திறந்து வைப்பதையும், குறுகிய சில மாதங்களுள் அவை செயல் இழந்துமூடுவிழாக்கள் செய்யப்படுவதையும்காணக்கூடியதாக உள்ளதாகவும் அத்தகையநிலை இந்த நிலையத்துக்கும் ஏற்பட்டுவிடாமல் இதன் நிர்வாகிகள் கண்ணுங்கருத்துமாக இருந்து இதனை வளர்ச்சியுறச்செய்து வருவார்களாயின் தன்னால் இயன்ற உதவிகளை அவ்வப்போது செய்துதரத் தயாராக இருப்பதாகத்தெரிவித்தார்.

மாவட்டக் கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் திரு.கே. சிவரத்தினம் பயிற்சி வகுப்பைத் திறம்பட நடாத்தும் முறைபற்றியும், பயிலும்மாணவர்கள் நிறைவேற்றவேண்டிய கடமைகள் பற்றியும் விளக்கிக் கூறினர்.

மன்னார் மாவட்ட சபைத் துணைத் தலைவர் திரு. வே. கைலாயபிள்ளை, உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. பற்குணம் ஆகியோருட்பட மற்றும் பலர் பேசினர்.

மாந்தைப் பிரிவுக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு வி கணேசமூர்த்தி நன்றியுரை கூறினர். [அ]

## மணிவாக்கு

தந்தை, தாய் மற்றும் உற்ருர் உறவினர் செய்ய முடியாத நன்மையை அறநெறிக்குத் திரும்பிய உள்ளம் எல்லா வகையாலும் செய்ய வல்லது.

—தர்ம பதம்.

# நமது நோக்கு

## வாக்குரிமையின் வல்லமை

அறிவில்லாதார் சிலர் தமக்கு மிகுந்த அறிவு இருப்பதாவே எண்ணுவார்கள். அதைப்பற்றிச் செருக்கும் கொள்வார்கள். அத்தகையோருடைய அறிவின்மையே பெரிய அறிவின்மை

தன்னுடைய குறையைத் தான் அறிந்து விட்டால் அது அந்தக் குறைக்கு ஓரளவு மருந்தாகும் அவ்வாறு அறியாமல் தான் அறிவாளி என்று எண்ணிக் கொண்டு பொதுநல சேவையில் ஈடுபடுபவனை மக்கள் மதிக்க மாட்டார்கள்

சமுதாய சேவையில் ஈடுபடுகிறவர்களுக்கு உள்ளத் தூய்மை மிகவும் அவசியம். அது இல்லாமற் போனுல் அவர்களால் தீமையே வளரும் சேவையில் பயன் உண்டாகாது

யுத்தத்தில் வெற்றிகரமாகப் போரை நடத்தும் பொறுப்பு, வீரர்கள் மேல் நிற்கிறது. அதைப்போலவே ஒரு சமுதாயத்தைச்சேர்ந்த மக்கள் பலருள் சமுதாயத்தின் பாரத்தைத் தாங்கி நடத்தும் ஆற்றல் கொண்ட, சிலர்மேல் அந்தப் பொறுப்பு நிற்கின்றது. வீரர்களின் வீரமே அவர்கள் மேல் போரின் பொறுப்பை ஏற்றுகிறது. சமுதாய நிர்வாகத்தின் பொறுப்பும் அதைத் தாங்க வல்லார் மேல் நிற்கும்.

சமுதாய சேவையின் மேன்மைபற்றிய பாரம்பரியக் கருத்து இது; இன்றைய உலகிலும் தன் உண்மை மறுக்கப்படவில்லை. பொதுஜன சேவைக்குக் கூலி துன்பம்தான். துன்பங்களைப் பொறுத்தே ஒரு நாட்டை ஒரு சமுதாயத்தைத் திருத்த முடியும்.

சமுதாயத்துக்கு ஆபத்தும் கஷ்டமும் நேரிட்ட காலத்தில் தைரியமாக முன்வந்து செய்யவேண்டிய சேவையை ஆற்றலும் பெருந்தன்மையும்கொண்டு செய்யக்கூடியவர்கள் இல்லையாயின் அந்தச்சமுதாயம் அழிந்துபோகும்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தில் பிரான்ஸ்தேசம் ஹிட்லரின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகி தோல்வியடைந்த நிலையில், உலகமே துன்பப்பட்டது. அந்த ஆபத்தான நிலையில் பிரான்ஸின் பெருமையை மீட்க முன்வந்தவர் பின் ஜனுதிபதியாக தேசத்தை உயர்த்திவைத்த மாஷல் டிகால் என்பதை நாமறிவோம்.

நாம் இதுவரையும் குறிப்பிட்டது ஒரு தொடர்பற்ற உபந்நியாசம் போல் தோன்றும்; அது அப்படியல்ல.

பண்டைய விழுமியங்கள் இன்றைய உலகுக்குமுற்றும் ஒவ்வாதனவையல்ல; இன்று மனிதன் அரசியலையே முன் வைக்கின்ருன்; அதனுடன் பொருளாதாரத்தை இணைத்து தான ஒரு உற்பத்தியாளன், பாவனையாளன், முதலாளி, தொழிலாளி, பெற்ருேர், நோயாளி போன்ற பல அம்சங்களைத் தனிப்படுத்தியும், ஒற்றுமைப்படுத்தியும், தான இந் நாட்டு மன்னனுக சில உரிமைகள் பெற்றிருக்கிருன். வாக்காளன் என்பது அவன் பெயர்.

ஆட்சியை, ஆக்கவும் நீக்கவும் அவனுக்கு வல்லமை உண்டு. இந்த வல்லமை அவனுடைய நன்மை தீமையை நேரடியாக பாதிக்கிறது. எனவே இந்த வல்லமையைப் புரிந்து கொள்வது அவனுடைய பெரும் பொறுப்பு. வாக்காளனின் வல்லமை வேட்பாளனின் வல்லமையிலும் சிறந்திருக்க வேண்டும்.

இந்தப் பொறுப்பின் பெருமையை நன்ருகஉணர வேண்டிய கட்டத்தில் நாம் வேட்பாளர்களின் வேதாந்தம் பற்றி அளவுக்கு மிஞ்சிப் பேசி அவப் பொழுது போக்குகின்ருேம்.

வாககாளர்களின் சிந்தனைத் திறனிலேயே, கட்சி அரசியல் கட்டப்பட்டிருக்கிறது. சிந்திக்கும் வல்லமை சிறிப்போனுல் கட்சியரசியல் பிள்ளை வேளாண்மை போல் வீடு வந்துசேராது.

இன்று நாட்டில் பொதுவாகவும், தமிழ் பேசும் மக்கள் மத்தியில் சிறப்பாகவும் ஜனுதிபதி தேர்தலைப் பற்றி நடைபெறும் பேச்சுகளும் பிரசாரங்களும் பெருமளவில் பித்தப் பிடித்த நிலைக்கு எட்டியுள்ளன.

வாக்குரிமை ஒரு புனிதமான உரிமை; வாக்காளனுக்குஇயல்பாகவே உடைய உரிமை; இரகசிய வாக்கெடுப்பு என்று தேர்தலைக் குறிப்பிடும்போது வாக்காளன் தனதுமனச்சான்றுடன் முடிவு செய்த முடிவு கருதப்படுகிறது; அது எவருக்கும் வெளிப்படுத்தக் கூடிய முடிவல்ல.

இந்த அடிப்படையில் கட்சி நிர்வாகம் முடிவு செய்ய, கட்சியை ஆதரிக்கும் மக்கள் அது இட்டது சட்டமெனக் கருதி அவ்வாறே வாக்களித்தல் பொருந்தாச் செயலாகும்.

எனவே அரசியல் கட்சிகளுக்கு உரிய பொறுப்பு, தனிவாக்காளனின் பொறுப்புக்கு மேலானது; கட்சியை மக்கள் ஆதரிக்குமளவில் கருத்துக்கள் ஏற்கப்படும் தன்மையனசயாது இருக்க வேண்டும். தனி வாக்காளனின் உரிமை பேணப்பட வேண்டும்.

கட்சித் தலைமையில் சான்ருேர் செயற்பட்டால் இது இலகுவாய் முடியும்; அரசியல்சூழ்ச்சிகள் குடிகொண்டு விட்டால் மக்களின் ஆதரவைக் கட்டுப்படுத்த முடியாது; நியாயமுமில்லை.

சாதாரண மக்கள் தீங்கென மிக இலகுவாகக் கணிக்கக்கூடிய விடயங்களில் கட்சிகள் தலை உடைப்பதாயிருந்தால் அதன் விளைவு எவ்வாறிருக்கும்?

இன்றைய ஜனுதிபதியா அல்லது இன்னெரு ஜனுதிபதியா என்ற 'சிம்பிள்' கேள்வியே தேர்தலில் இடம் பெறுகின்றது

வாக்காளர்களின் உள்ளக்கிடக்கையை அறிய, அவர்களின் சிந்தனையைத் தூண்ட கருத்தரங்குகள் அவசியம்.

எந்த கோணத்தில் பார்த்தாலும் இது ஒரு பொறுப்பான விடயம்; தமிழர்கள் தனித்துவாழ வேண்டினும், இந்தத் தேர்தல் அவசியமானது

தேர்தலில் யார் வெற்றி பெற்ருலும் பரவாயில்லை; தமிழ் மக்கள் நோக்குக்கமைய, அதற்குஆதரவான ஆட்சியை நாம் தெரிந்தெடுக்கும் வாய்ப்புண்டா என்பதே முக்கியகேள்வி.

அதனைத் தெளிவு படுத்தி வாக்காளர்களின் ஒற்றுமைப்பட்ட உணர்வை மேலோங்கச் செய்தலே வாக்குரிமையின் வல்லமைக்கு இலக்கணமாகும்.

சாவகச்சேரி எம். பி.யின்

# மழைநீரைத் தேக்கும் திட்டம்

## பாராளுமன்ற ஒன்றிய மகாநாட்டில் விவாதம்

[மட்டுவில்]

சாவகச்சேரிப் பகுதியில் மழைநீரைத் தேக்கி வைத்து விவசாய வளர்ச்சியை ஏற்படுத்தவும், கடற்கரைப் பகுதியைச் சார்ந்த உவர்ப்பகுதி நிலங்களில் விவசாயத்தை மேற்கொள்ளவும் சாவகச்சேரி எம். பி. தயாரித்த மழைநீர் தேக்கும் திட்டம், சர்வதேச பாராளுமன்ற ஒன்றிய மகாநாட்டில் விவாதத்திற்கு எடுக்கப்படவிருக்கிறது.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் இத்திட்டத்தைத் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளார்.

இந்தப் பபரிய திட்டத்தின் கீழ்; மட்டுவில் பகுதியி பரந்துள்ள உவர்த்தன்மை படிந்த நிலங்களை நெல் உற்பத்திக்குப் பயன்படுத்த முடியுமென்று திரு. நவரத்தினம் அண்மையில் அமெரிக்க நிலவள நிபுணர்களுடன் நடத்திய ஆய்வில் தெரிவித்தார். இதைத் தொடர்ந்தே அவர் இத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கான முயற்சியில் தீவிரமாக இறங்கியுள்ளார்.

இப்பொழுது சாவகச்சேரித் தொகுதியைப் பொறுத்தளவில் சுமார் மூன்றில் ஒரு பகுதி மழை நீர் கடலுக்குச சென்று உபயோகமற்றுப் போகிறது. இத்துர்ப்பாக்ய நிலையை மாற்றி அமைப்பதின் மூலம் சாவகச்சேரித் தொகுதியில் விவசாயத்தில் பண்டைய உணவுப் பொற்காலத்தை உருவாக்க முடியும் என்ற பூரண நம்பிக்கை இருப்பதாகவும் திரு. நவரத்தினம் தெரிவித்தார்.

ஐக்கிய நாணய உணவு விவசாய அமைப்பு நிறுவனத்தின் நிதி உதவியுடனேயே திரு நவரத்தின திட்டத்தை அமுல் செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

[இ]


# ஆற்றலும் பண்பும்

## அமைந்த பெருமகன்

''ஆனை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே'' என்பது தானே பழமொழி ஆனுல் தரமான 'சென்ட' வாசனைவரும் முன்னே பின்னுல் அவர் வருவார்.

கோட்டும் சூட்டும் பரந்த நெற்றி, சிவந்தமேனி, அழகான பல்வரிசை கூர்மையான மூக்கு, ஆணழகன்தான், மிருதுவான தயக்கமான பேச்சு. அளந்துபேசுவார், தன்கைக்கிள் மாட்டில் முட்டிவிட்டாலும் 'சொறி' என்பார்.

நான் கொஞ்சம் 'பிரட்ளம் கேஸ்' என்னைப்பற்றி இல்லாததும் பொல்லாததும் நான் இல்லாத இடத்தில் நிறையப



பேசப்பட்டது. எல்லாவற்றையும் அவர் கேட்டுக்கொண்டுதானிருந்தார் ஆனுல் என்னை உதவி ஆசிரியராக ஏற்றுக்கொள்ள சம்மதமா என்று கேட்டபோது அவர்கள்சொன்னது ஒன்றும் உறைக்கவில்லை ''அவர் என்னுடைய மாணவராயிருந்தவர் அவருடைய நடத்தையை நேரில் பார்க்க விரும்புகிறேன்'' என்று முழு மனதோடு ஏற்றுக்கொண்ட அதிபர் அவர். அவர் என்மீது வைத்த நம்பிக்கை கடைசி வரை வீண்போகவில்லை யென்றே நினைக்கிறேன்.

ஒரு தடவைமட்டும் அவர் தந்த நேரசூசிகை பற்றி முகம் சுழித்திருக்கிறேன். ஒருவகுப்புக்கு புவியியல் போடப்பட்டிருந்தது நான் படித்த காலத்தில் அது ஐந்தாம் வகுப்பிற்கு விருப்பத்துக்குரிய பாடமாயிருந்தது. நான் அதைக்கைவிட்டுவிட்டேன். அதனுல் ஒரு இலங்கைப்படம் தானும் வரையத் தெரியாது – இன்றும் தான் அதைச் சொன்னேன். 'நீர் கெட்டிக்காரன் வீட்டில்மாணவரிலும் பார்க்க ஒருபக்கம் மாத்திரம்மேலதிகமாகப்படித்துக்கொண்டுவாரும்போதும். பூமிசாத்திரப்படங்கள் கரும்பலகையில் மாட்டக்கூடியவை நான் வாங்கித்தருகிறேன்'' என்ருர்சிரமேற் கொண்டேன்.

என்னுடைய வாய் சும்மா கிடவாது ஆசிரியர் அறையில் ஒருவிழா பின்போடப்பட்டதனுல் அதற்குச்சேகரித்தபணம் அதற்குப் பொறுப்பாயிருந்த ஆசிரியருக்கு அபமாதத்துக்கு ''பெற்ருேல் பில்'' லுக்கு காணும் என்று சொல்லிவிட்டேன் அந்த ஆசிரியர் கொஞ்சம் 'சென்சிட்டிவ்' பேர்வழி ''தாம் தூம்'' என்று குதித்தார். பதவியை விட்டுவிலகுகிறேன், ஆசிரியத்தொழிலையே ராஜினுமாச் செய்கிறேன் என்று கூக்குரலிட்டார். நான் அழாதகுறை அவர்காலில் விழுந்துகும்பிடாதகுறை. ''என்னுல் ஒன்று நடந்ததென்றிருக்கக்கூடாது தயவு செய்து இப்போது ஒன்றும் செய்துவிடாதீர்கள்'' என்று கெஞ்சினேன் நல்லவேளை அப்போதைக்கு அவர் தணிந்துவிட்டார். ஆனுல் சில மாதங்கள் செல்லஅப்பதவியிலிருந்து விலகிவிட்டார். எல்லாம 'ஆசை' யருக்குத்–அவர்தான் அந்த அதிபர்–தெரியும். அவர் ஒய்வுபெற்றுப் பலவருஷங்களின் பின ''முசுப்பாத்தி பண்ணத்தான் வேணும் ஆனுல் இன்னுர், இன்னுரோடு [அந்த ஆசிரியரின் பெயரையும் சொல்லி] கொஞ்சம் கவனமாயிருக்கவேணும்'' என்ருர் எவ்வளவுபெரிய மனிதன்!

''ஆசிரியத்தொழில் சில சமயங்களில் சலிப்புத்தருவது தான் அலுப்புத்தட்டுவது தான் அதற்காக செயற்கையாகவாவது ஒரு பிடிப்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் இல்லாவிட்டால் வருடா வருடம் சொன்னதையே மீண்டும் மீண்டும் சொல்லிக்கொடுத்துக் கொண்டிருப்பது ஏக சுருதியி இருக்கும் என்ருர் ஒரு நாள் இதுவும் அவர் ஓய்வுபெற்ற பின்தான்.

அன்று ''இவற்றை உம்மிடம் தருகிறேன் இதனுல் நீர் அடிக்கடி லீவுஎடுக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை இனி எனக்குத்தேவையில்லை என்று சிரித்துக்கொண்டே வெற்று லீவு விண்ணப்பப்படிவங்கள் சிலவற்றைஎன்னிடம் நீட்டினுர்.

நாங்கள் லீவில் நிற்போம். அதுவும் சுகயீன லீவு. பெரிய கடையில் காரில் போகும் போது எங்களை சைக்கிளில் காணுத மாதிரிப் போவார்.

இ. மகாதேவா

தனக்குள்ளேயே ''பாவம், மனிதனுக்குச் சுகமில்லை. மருந்து வாங்க அனுப்ப ஆள் இல்லை, தானே சைக்கிளில் போகிருர்'' என்று தனக்குள்ளேயே சொல்லி தன்னை நம்பவைத்துவிடுவார். எவ்வளவு பெருந்தன்மை.

ஒரு தடவை வித்தியாதிபதி ''லாக் புக் (குறிப்புப்புத்தகப் பேடு) கை எடும்'' என்ருர். இவரோ ''ஏன்? என்ன எழுதப்போகிறீர்?'' என்ருர் ''இல்லை இங்கு தாவரவியல் தோட்டமில்லை. புல்லும் பூடுமாய் வளர்ந்திருக்கிறது'' என்ருர், ''எப்படி உமக்குத் தெரியும்? என்று இவர் கேட்டார், 'இப்போது பார்த்தேனே'' என்ருர் அதிகாரி ''அப்படியா? 2ம் குறிப்பின் கீழ் என் உத்தரவின்றிக் கல்லூரிக்குள் நீங்கள் நுழைந்ததாக நானும் ஒரு குறிப்பு எழுதிவிடுகிறேன்'' என்ருர். அதிகாரி வாலைச் சுருட்டிக் கொண்டுபோய்விட்டார்.

அதே அதிகாரி ஒரு தடவை ராணுவத்தினரை விடுதிசாலையில் குடியேற்ற முற்பட்டார். 'திடுதிப்பென்று பாடசாலையை மூடச் சொன்னுல், இந்த விடுதி மாணவரையும் என்ன செய்வது? எப்படி வீடுகளுக்குச் செல்வார்கள்?' என்று கேட்டார் 'உமக்குப் பாதுகாப்புக்காக ராணுவமோ?' என்று நையாண்டியும் பண்ணினுர். 'சரி. அதிகாரம் உம் கையில். மூடுகிறேன். இப்பிள்ளைகளை நீர பாரமெடுத்துக்கொள்ளும்'

[5-ம் பக்கம் பார்க்க]

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

# பிரசார வேலைகளிலிருந்து இரு ஐ. தே. க. பிரமுகர்கள் நிறுத்தம்?

### தலைமைப்பீடம் ஆலோசனை

[கொழும்பு]

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த இரு முக்கிய அரசியல் வாதிகளின் மீது நடவடிக்கை எடுப்பதுடன், அவர்களை ஜனாதிபதித் தேர்தல் பிரசார வேலைகளில் ஈடுபடாதவாறுசெய்யும் வழிவகைகளையும ஐக்கிய தேசியக்கட்சி தலைமைப்பீடம் ஆராய்ந்துவருகின்றது.

நாட்டின் மேற்குக் கரைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களான இந்த இரு ஐ.தே.க.பிரமுகர்களும் அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் செய்கைகளில் இறங்கினர்கள் என்று புகார்கள் கிடைத்துள்ளனவாம். இதனையடுத்தே இவர்கள்மீது மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன.

ஐ.தே க. தலைமைப் பீடம் இதுபற்றிக் குறிப்பிடுகையில், இந்த இரு பிரமுகர்களினதும் நடவடிக்கைகள் அவர்களது தொகுதிகளில் அரசுக்குமாறான வையாக இருக்கின்றனவென்றும், இந்நிலையில் இவர்களை ஜனாதிபதித் தேர்தல் பிரசார வேலைகளில் ஜே ஆர். ஜயவர்த்தனவுக்கும் ஆதரவாவாக ஈடுபட அனுமதித்தால் ஐ தே க. வின் மீது மக்கள் வைத்துள்ள அபிமானம் குறைவடையும் என்றும் தெரிவித்தது.

ஜனாதிபதி ஜயவர்த்தன ஐ.தே கட்சியில்ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று அறிவித்ததையடுத்தே இவ் இரு பிரமுகர்கள் மீதான புகார்கள் தலைமைப் பீடத்துக்குக் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. [கி]

# ஹெக்டரின் முதல் கூட்டத்தில் சிறிமா, அனுரா இல்லை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளராக நிறுவப்பட்டிருக்கும் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ நேற்றுமுன் தினம் தமது தேர்தல் பிரசாரத்தை கண்டி புனித தலதா மாளிகையைத் தரிசித்தபின்னர் ஆரம்பித்தார்.

கொழும்பிலிருந்து மோட்டார் காரில் கண்டி சென்ற திரு கொப்பேகடுவவை ஹொரகொல்லையிலுள்ள அமரர் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் சமாதிக்கும் அஞ்சலி செலுத்தினர்.

திரு.கொப்பேகடுவா நேற்று முன்தினம் ஆரம்பித்த அவரது முதலாவது பிரசாரக் கூட்டத்தில் பல ஸ்ரீலங்கா சு.க. ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். ஆயினும், கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அவரது மகனை மஸ்கேலிய, நுவரேலியா இரண்டாவது எம். பி. திரு. அநுரா பண்டாரநாயக்கா ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

கொழும்பிலிருந்து கண்டி சென்ற திரு. கொப்பேகடுவவை வரவேற்கு முகமாக பாதயோரங்களில் மக்கள் பெருமளவு திரண்டுநின்றனர் நீலநிறக்கொடிகளால் அவர் பயணஞ்செய்தபகுதிகள் அலங்கரிக்கபபட்டிருந்தன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர்களும், ஆதரவாளர்களும் நாடுமுழுவதிலும் தொடர்ச்சியாக ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக்கூட்டங்களை ஒழுங்கு செய்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. (கி)

# வாசுதேவவும் போட்டியிடுகிறார்

[கொழும்பு].

நவசமசமாஜக் கட்சித்தலைவரான திரு வாசுதேவநாணயக்கார ஜனாதிபதித் தேர்தலில் தாம் குதிக்க விருப்பதாக அறிவித்துள்ளார்.

இதுபற்றி திரு வாசுதேவ நாணயக்கார தெரிவிக்கையில் கூறியதாவது: கடந்த இரண்டு மாதங்களாக உழைக்கும் வர்க்கத்தினரதும் இடதுசாரிகளினதும் ஆதரவுடன் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளராக திரு கொல்வின் ஆர். டீ. சில்வாவை ஜனாதிபதித்தேர்தலில் நிறுத்த நாம பல முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம்.

ஆனால் திரு. கொல்வின் ஆர் டி. சில்வா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதித்தேர்தலில் இறங்குவதையே அதிக அக்கறைகாட்டினர். தற்போது அவரது விருப்பம் கைகூடமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. ஸ்ரீ. ல. சு. கட்சி தனது வேட்பாளராக ஹெக்டரை நிறுத்தியுள்ளது.

இதனையடுத்து நவசமசமாஜ கட்சியின் மத்தியகமிட்டிக்கூட்டம் கடந்த 10ம் திகதி கூடி ஆலோசனை நடத்தியபின்னரே ஜனாதிபதித் தேர்தலில் அது போட்டியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவார்த்தனவை நான்குமுனைகளிலிருந்தும் எதிர்த்து அவரைத் தோலவியடையச் செய்வதே இக்கட்சியின் நோக்கமாகும்.'' என்றார்.

[கி]

# நாடுமுழுவதிலும் 6,982 வாக்களிப்பு நிலையங்கள்

(கொழும்பு]

நாட்டின் 2 மாவட்டங்களில், 6,982 வாக்களிப்பு நிலையங்கள் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நிறுவப்படவிருக்கின்றன.

இவற்றில் 6,621 நிலையங்கள் ஆண், பெண் இருசாராருக்கும் பொதுவாக விளங்கும் மிகுதி 361 நிலையங்கள் முஸ்லீம் மக்கள் வாழும் பிரதேசங்களில் முஸ்லீம பெண்களுக்கென்று பிரத்தியேகமாக இருக்கும். [கி]

# ஆற்றலும் பண்பும்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

என்று திறப்புகளை வீசிவிட்டுப் போய்விட்டார். மாட்டிறைச்சி இந்து விடுதியில் காய்ச்சக் கூடாதென்ற கருத்துக்கு மதிப்பளித்து ராணுவம அங்கு வராமல்போனது வேறு கதை.

சேவை நீடிப்புக்கு விண்ணப்பித்தார் அது உரியகாலத்தில் வரவில்லை. அவ்வதிகாரியின் காழப்பினுல் தாமதமாகவே வந்தது. வந்த மறுநாள தான் ஒய்வுபெறுவதாகக் கடிதம் அனுப்பினர். அவர்கள் தர, நான் வாங்க...இது என்ன கேவலம்? சேவைக்கு மதிப்பில்லையா?' என்ற நினைப்புத்தான் காரணம். இதை அவருடைய பிரிவுபசாரக் கூட்டமொன்றில் அழகாகச் சொன்னர். ஒரு பன்றிக்கு நோய்வந்துவிட்டது. அதைச் சொந்தக்காரன் மிருகவைத்தியரிடம் கொண்டுபோனன. அவர் ஒரு குழிகை கொடுத்தார். எப்படி அதைப்பன்றிக்கு ஊட்டுவது? ஒரு குழாயை பன்றியின் வாய்க்குள் செலுத்துவது மறுமுனையில் குழிகையை வைத்துவிட்டு வாயினுல் ஊதுவது சொந்தக்காரன் ஊத பன்றியும் அதே நேரத்தில் ஊத குளிகை சொந்தக்காரன் வயிற்றுக்குள் போய்ச் சேர்ந்தது.''

எனக்கும் அவருக்கும் அவர் ஒய்வுபெற்றபின்னரும் உறவு நீடித்தது. இருவருக்கும் மர்மக்கதை படிக்கும் ஈடுபாடு உண்டு. அதிலும் அகத்தா கிறிஸ்டி ஏர்ஸ் ஸ்ரான்லி கார்டினர் என்றால் போதும். நான் வாங்கிய நூலொன்றை அவரிடம் கொடுத்திருந்தேன். அவர் நோய்வாய்ப்பட்டபின் அவரைப் பார்க்கப் போனேன். ''கொஞ்சம் பொறும்'' என்றார். உள்ளே போனர், என்னுடைய நூலைத் தூக்கிக் கொண்டு வந்தார். ''இது உம்முடையது, பேச்சுவாக்கல் பின்னர் மறந்து விடுவேன் அதுதான் இதை முதலிலேயே எடுத்துக் கொண்டு வந்தேன்'' என்றார். என்ன நேர்மை, நாணயம்!

மனைவியைச்சேலைக்கடைக்கு அழைத்துச் செல்வார். கடை வாசலில் தெருவைப்பார்த்த படி நிற்பார். எங்கே, தான் ஏதாவது சேலையை நோக்க அதுதான் கணவனுக்கு பிடித்தமானது என்று நினைத்து தனக்குப் பிடித்தத வாங்காமல் அதை வாங்கிக்கொண்டு வந்துவிட்டால்...! இப்படியும் ஒரு மனிதர் உண்டோ?

ஒருநாள் நான் கல்லூரிக்குச் செல்லவில்லை. என் வகுப்புக்குப்போயிருக்கிறர் ''யார் இப்பொழுது உங்களுக்குப் பாடம்?'' என்று கேட்டிருக்கிறர். ''மகாதேவா'' என்று பதில் எந்த மகாதேவா? ''ஸ்கோடா'' என்று கோரஸ் இப்படியான நேரத்தில் அவருக்கு முகம் சிவக்கும், வியர்க்கும். கோட்டில் மார்புப்பையில் லேஞ்சி இருக்கும். அதை எடுத்து முகத்தைத்துடைப்பார். கடைசி முனை உள்ளே போகும் வரை ஒரு விரலால் அதைப் பையில் திணிப்பார் ''அப்படியெல்லாம் சொல்லக் கூடாது'' என்று சொல்லிவிட்டு நழுவிவிட்டார்,

உரக்கப்பேசாதவர், மனதாலும் பிறருக்குத் தீமை நினைக்காதவர், தானுண்டு தன்பாடுண்டு, தன் கடமையுண்டு என்று வாழ்ந்தவர் விஜயம் முத்தையா ஆசைப்பிள்ளை. அவர் இன்று இல்லை. அவரைப்பற்றிய நினைவு அவர் பூசியிருந்த 'சென்ட்' போல இன்றும் சுகந்தமாய் மணக்கிறது.

# இன்றைய நிலையில் கூட்டணியின்சிறந்த வேட்பாளர் குட்டிமணியே!

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ''கூட்டணியின் நிலை என்ன?'' என்று எல்லோரும் எதிர்பார்த்திருக்கும் வேளையில் குட்டிமணியை ஜனாதி தேர்தலில்நிறுத்தினுல் என்ன? என்ற கேள்வி பலரினதும் சிந்தனையைக் கிளறியுள்ளது, கூட்டணியை ஆதரிக்கும் 'சைலன்ட் மஜோரிட்டி'யில் நானும் ஒருத்தி என்ற முறையில எனது கருத்துக்களை இங்கு கூற விரும்புகிறேன்

தூக்குத்தண்டனைக்குத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர் ஒரு நாட்டின் அதி உத்தம ஜனாதிபதியாக வருவதற்குப் போட்டியிடுவதான செய்தி, விமானக்கடத்தல் செய்திகளைவிட ஒருபடி உயர்ந்ததாகும். இச்செய்தியின் மூலம் தமிழ் ஈழப் பிரச்சாரம் உலகின் மூலை முடுக்குகளுக்குள் நுழையும்வாய்ப்பபைப் பெறுகிறது. ஆட்சிபுரியும் ஜனாதிபதியின் தேர்தலில் ஆர்வம் காட்டுவது ஏன்?' என்று கேட்க இவர்கட்கு நா எழமாட்டாது.

மேலும் குட்டிமணியைத் தேர்தலில் நிறுத்துவதன மூலம் தமிழ் மக்களிடையே தோன்றக்கூடிய பிரிவுகளைத் தற்காலிகாமாக நிறுத்தவும் முடியும்.

- யோகராணி ஜேம்ஸ்.
புனித அந்தோனியார் வீதி,
மாதகல்.

★

## மக்கள் கருத்து

பாராளுமன்றத்தைப் பிரச்சார மேடையாகப் பாவிக்க விரும்பும் கூட்டணிக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பமாகும்.

பெரும்பாலான தமிழ்மக்களின் செல்வாக்கைப் பெற்றுள்ள கூட்டணி, கூட்டு ஒப்பந்தமெதுவுமில்லாமல்வேறொருகட்சி வேட்பாளரை ஆதரிக்கும்படியாகக் கேட்பதோ அன்றேல் மக்களின் வாக்களிக்கும் ஜனநாயக உரிமையை உபயோகிக்க விடாமல் பகிஷ்கரிக்கும்படி கோருவதோ ஒரு உசிதமான செயலாகாது. உளரீதியாக, மக்களுக்கும் கூட்டணிக்கும் இடையே சிறுவிரிசல் ஏற்பட இடம் கொடுக்கும்.

குட்டிமணிக்கு அளிக்கும் வாக்குகள் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக அளிக்கும் வாக்குகளாகக் கணிக்கப்படும் அதே வேளையில் குட்டிமணிக்கு உயிர்ப்பிச்சை அளிக்கும்வாக்குகளாகலாம்.

குட்டிமணியைத் தேர்தலில் குதிக்கவைப்பதால் கூட்டணி–அரசு உயர்மட்டப் பேச்சு வார்த்தைகளுக்குக் குந்தகம் ஏற்படும் என்று எண்ணிவதற்கில்லை. ஏனெனில் குட்டிமணி கூட்டணியின் முக்கியமானவர்களுள் ஒருவர் அல்லர்.

கூட்டணியை எதிர்ப்பவர்களும், அடிக்கடி கேள்விக்கணை தொடுப்பவர்களும் இவ்விடயத்தல் மௌனமாகவே இருப்பார்கள், ஏனெனில் 'தமிழ் ஈழத்தை அமைப்பதற்கான மக்களாணையைப்பெற்ற நீங்கள் இலங்கை முழுவதும்

## சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் தமிழ்மக்கள் சாரபில திரு. யோகச்சந்திரனை குட்டிமணி அபேட்சகராக நிறுத்தினுல் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் தந்திர முயற்சியகளெல்லாம் தவிடுபொடியாகிவிடும் இந்த உண்மையினுல் தற்போதைய பிரச்சனை தமிழ் மக்களின் நியாயமான டிமாண்ட் சிறிலங்கா அரசும் சரி உலகநாடுகளும் அறிய வாய்ப்பேற்படும்.

ஜனாபதியின் கீழ்தற்பொழுது இயங்கிவரும் நீதி பரிபாலனத் துறை உண்மையான ஜனநாயகநாட்டில் தனித்தே இயங்க வேண்டும் ஆனுல் சிறீலங்காவில் அப்படியல்ல ஆனுலும் இந்நாடு ஜனநாயகத்தைக் கட்டிக்காக்கும் புனிதமான தலம் என்ற பெயரைத் தாங்கிய வண்ணமே இருக்கின்றது தவறு ஜனாதிபதியின் அல்ல; மக்களிலேதான் தங்கியிருக்கிறது. எனவே மக்கள் உணர்ந்து தகுந்தநேரத்தில் தக்கபடி பாடம் புகட்டி ஜனநாயக உண்மைகளை நியாயமாக்க வேண்டும்,

குட்டிமணி, ஜெகன் ஆகிய இருவருக்கும் வழங்கப்பட்ட மரணதண்டனையை இன்னுமொரு ரீதியில் மக்கள் சிந்திக்கிறர்கள். அதுதான் தற்போதைய ஜனாதிபதி தேர்தலுக்காக இடப்பட்ட வித்து ஆக இருக்கலாம். அது எப்படி இருந்தபோதிலும் தற்போதைய நிலையில் திரு. யோகச்சந்திரன ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படவேண்டும். இதன் மூலம் தமிழ் மக்களின் ஒரு முகமான கருத்தாகிய மரணதண்டனைக்கான எதிர்ப்பு, தமிழ் ஈழத்திற்கான ஆதரவு ஆகிய இரண்டையும் தெளிவுபடுத்தலாம். எனவே, தற்பொழுதுள்ள சந்தர்ப்பத்தை நழுவவிடாது குட்டிமணியை வேட்பாளராக நிறுத்த அனைவரும் முன்வர வேண்டும்.

சி. உதயகுமார்

வர்த்தலை விளான்,
தெல்லிப்பழை.

## சுற்றுப்போட்டி

(கரவெட்டி)

உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வருடாந்த கரபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாத பிற்பகுதி நடைபெறவுள்ளது.

# "தோட்டத் தொழிலாளருக்கு சகல உரிமைகளும் உண்டு"

## — ஜனாதிபதி

[கொழும்பு]

சமூகத்தில் ஏனைய தரத்தினர் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் தோட்டத்தொழிலாளர்களுக்கும் கிடைக்க வேண்டும என்று ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தன நேற்று கொழும்பில் குறிப்பிட்டார்

இலங்கைத் தோட்டத் துரைமார்கள் சங்கத்தினரின் விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி கலந்து கொண்டார். ஹோட்டல் தப்ரபேனில் நடந்த இவ் வைபவத்தில் திரு ஜெயவர்த்தன பேசுகையில், தோட்டங்களில் கல்வித்தாம் மிகவும் தாழ்ந்தே உள்ளதென்றும் பாடசாலைகள் பற்றுக்குறை நீங்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

தோட்டங்களில் கிராமங்கள் உருவாகவேண்டுமென்றும், அவைமூலம் தொழிலாளரின் தரம் உயரவேண்டுமென்றும் ஜனாதிபதி கூறினார்.

தோட்டங்களில் தொழிலாளர் தரம் உயர தோட்டத் துரைமார் பங்காற்றவேண்டுமென்றார்.

# தமிழ் உரிமைச் சுற்றறிக்கை:

## பண்டிதர் கேள்விக்கு அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

அரசியலமைப்பிலுள்ள தமிழ் உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட சுற்றறிக்கைக்கு என்ன நடந்திருக்கிறதென்பதை தெரிவிக்குமாறு ஊர்காவற்றுறை எம். பி பண்டிதர் கா பொ. இரத்தினம், அரசாங்க நிர்வாக அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் கேட்டார்.

இக்கூட்டம் பாராளுமன்ற 7ம் குழு அறையில் நிர்வாக அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்கிரம தலைமையில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை எம். பியின் கேள்விக்கு அமைச்சரின் செயலாளர் திரு சிறீவர்த்தன பதிளிக்கையில், அமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு அச்சுற்றறிகை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதென்று சொன்னார். இச்சுற்றறிக்கை எப்பொழுது வெளியிடப்படும் என்று பண்டிதர் இரத்தினம் கேட்டபோது, "அமைச்சரவை செயலாளருடன் தொடர்பு கொண்டு அதன் நிலைமைபற்றி அறிவிக்குமாறு அமைச்சர் திரு. மொண்டேகு ஜயவிக்கிரம. தமது செயலாளருக்குப் பணித்தார்.

இக் கூட்டத்தில் நிர்வாக அமைச்கின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்,

(மா)

## 38 வருட ஆசிரிய சேவையின்பின ஒய்வுபெற்றார்

(அ யாலை)

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிய திருமதி மேரி. ஜெயமணி முத்தையா 38 வருட ஆசிரிய சேவையின் பின்னர் இளைப்பாறியுள்ளார்.

பயிற்றப்பட்ட முதலாந்தர ஆசிரியையான இவர் நான்கு வருடங்கள் உடுத்துறை சி சி தமிழ்க்கலவன் பாடசாலையிலும், 34 வருடங்கள் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலும் சேவையாற்றியுள்ளார்.

திருமதி முத்தையா காலஞ்சென்ற நல்லூர் சாதனாபாடசாயின் மூன்னாள் அதிபரும், சமூகத் தொண்டர்' ஆசிரியருமான திரு. கே. பி முத்தையா(விடிவெள்ளி)வின் பாரியாராவார்.

(அ)

ஊர்காவற்றுறை

## மினிபஸ் வழிமறித்துத் தாக்குதல்:

## மூவர் றிமாண்டில்

(ஊர்காவற்றுறை)

யாழ்ப்பாணம் – ஊர்காவற்றுறை பிரதானவீதியில் பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த மினிபஸ்ஸை வழிமறித்துத்தாக்கிய கூட்டமொன்று பஸ்ஸை நொருக்கி ரூபா இருபத்தையாயிரம் சேதம் விளைவித்ததாக ஊர்காவற்றுறைப் பொலிசில் செய்யப்பட்ட முறைப்பாட்டைத்தொடர்ந்து புலன்விசாரணையில் இறங்கியபொலிசார் சந்தேகத்தின்பேரில் நால்வரைக் கைதுசெய்து ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு ரி. கே. என். திலகன் முன்னிலையில் ஆஜ செய்தனர்.

திருச்செல்வம், சார்ள்ஸ், டிக்சன் ஆகிய மூன்று சந்தேக நபர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மாணவனன குமார் என்ற சந்தேக நபர் பிணையில் விடப்பட்டுள்ளார்,

முறைப்பாட்டுக்காரரின் சார்பில் சட்டத்தரணி எல். கே. மகேந்திரனும், சந்தேக நபர்களின் சார்பில் சட்டத்தரணி ப. கதிரவேலுவும் ஆஜராகினர்.

மேல் விசாரணை இம்மாதம் 15ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

(அ)

உத்தரவாதத்துடன்

சென்னை - றூபவாகினி

ஏரியல் பொருத்திக்கொள்ளவும்

மற்றும்

உங்கள் வீட்டு மங்கள வைபவங்களை

வீடியோவில்

படம் பிடித்துக்கொள்ளவும்

வீனஸ்

றெக்கோடிங்

றேடியோ வாச் வேக்ஸ்

ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்

யாழ்ப்பாணம்.

## கைத்தொழில் மண்டபத் திறப்பு விழா

(கரவெட்டி)

துன்னாலை கலிகைக் கந்தன் கிராம அபிவிருத்து சங்கத்தின் கைத்தொழில் மண்டபத் திறப்புவிழா இம்மாதம் 18ம் திகதி நடைபெறவுள்ளது.

இம் மண்டபத்திறப்பு விழாவில் பிரதம விருந்தினர்களாக எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம் தமிழர்விடு தலைக்கூட்டணி தலைவரும் நல்லூர் எம். பி. யுமான திரு. மு. சிவசிதம்பரம், உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க, நடராசாஆகியோர் கலந்துகொள்ளுவார்கள்.

புதிய கைத்தொழில் மண்டபக்கட்டிடத்தை உடுப்பிட்டி எம். பி, திறந்துவைப்பார்.

## தேசியஇளைஞர்மன்றத்தினல் பாலாவிக்குளம் புனரமைப்பு

(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் பாலாவிக்குளம் சுமார் 30 ஆயிரம் ரூபா செலவில் மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினல் புனரமைக்கப்பட்டு வருகிறது.

கடந்த 30ஆம் திகதி ஆரம்பமான இப்புனரமைப்பு வேலையில் ஆரம்பத்தில் 60 தொண்டர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். மழைகாலத்திற்குமுன் புனரமைப்பு வேலைகள் முடிவடைய வேண்டும் என்பதற்காக தற்போது இவ் வேலையில் 80 தொண்டர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இப்புனரமைப்பு வேலைகள் முடிவடைந்ததும் பாலாவிக்குளத்தில் கோடை காலத்திலும் நீர் இருக்குமென மன்னார் மாவட்ட இளைஞர் சேவை மன்ற அதிகாரி ஜனப் எம், சி. ஏ. கபூர் தெரிவித்தார். (க)

## வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

வடஇலங்கை சங்கீதசபை நடாத்திய 82ம் ஆண்டு மிருதங்கம், நடனம், (பரதம், கதகளி) பண் இசை, நாடகம் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும். மிருதங்கம் மூன்றும் பகுதி முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

### மிருதங்கம்

#### மூன்றும் பகுதி முதலாம்பிரிவு

இராமச்சந்திரன் ஜெயராஜ், சோமகேசன் சோமங்கல்சித்தார்த்தன், கணேசன் திருநாவுக்கரசு f ஸ்ரீசாந்தினி நவரட்ணம், நடராசா திருக் மரன், ஹேமவதி கைலாசநாதக்குருக்கள், f மகேசன் அரவிந்தன், தயாநிதி சுப்பிரமணியம், அமிர்தநாதர் டயஸ் லோயலாவின் , f கணேசன் சுகுமாரன்

#### இரண்டாம்பிரிவு

வைத்தியநாதசர்மா ஆத்மானந்தசர்மா, சாங்கேசர் பத்மநாபன்.

#### மூன்றும் பகுதி இரண்டாம் பிரிவு

தருமராசா தயாளன், கணேசன் பிரணவன், பத்மநாத ஐயர் ஜெயசங்கர், குமாரசாமி ஸ்ரீ குமார், பரராஜசிங்கம் அரவிந்தன், சௌந்தர நாயகம் அமலன், மாணிக்கவாசகர் ரகுராம், கனகரட்ணம் கிரிதரன், கயித்தாம்பிள்ளை கிரிஸ்ரி ஜெயதாஸ் யோகு பசுபதி யோகசங்கர், நவரத்தினம் பரமேஸ்வரன், பேரின்ப நாயகம் ஜோய் போல்வின், துரைசிங்கம் ஹரிச்சந்திரா, குருநாதன் உருத்திராகரன், சாந்திரட்ணம் ஜெயட பிரகாஷ் சாந்தகுமாரி திருமலைசாமி சர்மா, சிவசக்திவேல் கஜபதி செல்வத்துரை செல்வக்கமலன் செல்லத்துரை தனுஷன், கந்தையா உமைபாலன், நவரத்தினம் முரளீதரன், கனகலிங்கம் கரிதரன்.

#### சாதாரணசித்தி

நவரட்ணராஜா சிவரட்ணராஜா சுனில், நாகேந்திரம் லோகிராஜ், கந்தசாமி சரவணன், கணேசன் பாலகிருஷ்ணன், அம்பிகாபதிரவீந்திரன், கருணாநிதி துரைரத்தினம், நாகலிங்கம் சுகுண தாசன், அருணகிரிநாதன் கோபிதன்,

சோமஸ்கந்தஐயர் சந்திரசேகரன், பாலசுப்பிரமணியம்நிரஞ்சன், குலசிங்கம் வேணுகோபன் புவிராசா கணேந்திரன், சிவபாதசுந்தரம் மரகதகுமார், இராசரத்தினம் அரவிந்தன், இரத்தினசிங்கம் தவசுதன், ஆறுமுகசாமி முருகதாஸ், இரத்தினவேல் இராஜவேல், சபாபதிப்பிள்ளை றமேஷ், தம்பித்துரை சிவதாஸ்.

#### நான்காம்பகுதி முதலாம் பிரிவு

f செல்லையா நாகேஸ்வரன், f கண்ணுத்துரை ஆனந்தகுமார், உருத்திரமூர்த்தி கஜேந்திரன, நடராஜா சுதாகர், f பேதுருப்பிள்ளை பிறேம் றப்பியல் பற்றிக், கனகசிங்கம் அலன்' f அய்யாக்கண்ணுதேசிகர் சோமசுந்தாம், சிவநேசன் ஜகத் நந்தலஷ்மன், சிவதேவி இராமலிங்கம், குலேந்திரம் ஸ்கந்தபாபு,

#### நான்காம்பகுதி இரண்டாம் பிரிவு

செல்வமாணிக்கம் பிரபாகரன், இராசேந்திரம் இரத்தினேசன், கதிரித்தம்பி கலாமோகன், சிவராஜினி செல்லத்துரை, ஐயாத்துரை மோகனச்சந்திரன, சுப்பிரமணியம் ஜீவகாந்தன், வேலுப்பிள்ளை வாசு, கனகசகபை சிவானந்தன், இராசையா இராசேந்திரன், இராசமணி யோகேந்திரன், தவராசலிங்கம் ராகுலன், நடராஜக் குருக்கள் சண்முகநாதன், பழனிவேல் பார்த்திபன், புஷ்பராணி பொன்னையா, சுப்பிரமணியம் பாஸ்கரன்,கனகசபாபதி சேயோன், நவரத்தினம் சாந்தன்.

#### சாதாரண சித்தி

முத்துலிங்கம் கேதீசன், லோகநாதபிள்ளை ரவீந்திரநாதன், முருகேசு ரவிகுலராம், தம்பிராசா விசாகன், சிவராசா விசாகன். நாகேந்திரம் ஜதீஸ்குமார், சிவனடியான் யுகபாலன், செல்லத்துரை முருகதாசன், தேவரத்தினம் டானியல் ஞானரூபன், து கணேசரட்ணம், சரவணமுத்து ரமேஷ், சிவகிரீடம் சயந்தயோகன், கருணநாதன் ஜெயகுமார், சங்கரநாராயணஐயர் ஹேமசபேசன், பத்மநாதன் ஸ்ரீகமலன், இரத்தினஜோதி மயூரன், வருணகுலசிங்கம் ராமேஸ்

(7ம் பக்கம் பார்க்க)

## மருந்தெடுக்க ஆஸ்பத்திரி சென்ற

# பொலிஸ் அதிகாரி திடீர் மரணம்

(வவுனியா)

ஆஸ்பத்திரியில் மருந்துவாங்கச் சென்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் ஆஸ்பத்திரியிலேயே திடீரென மாரடைப்பு ஏற்பட்டு மரணமானார்.

வவுனியா ஆஸ்பத்திரியிலேயே இச்சம்பவம் இடம் பெற்றது.

அல்வாயைச் சேர்ந்த சி. ஐ. டி சார்ஜன்ட் திரு. மகேந்திரனே [வயது 42] இவ்வாறு மரணமானார்.

4 பிள்ளைகளின் தந்தையான இவர் வவுனியா ஆஸ்பத்திரியில் தமக்கு மருந்து எடுப்பதற்காக தமது மனைவியுடன் சென்று மருந்து பெற்றுக்கொண்டு நிற்கையிலே திடீரென மார்படைப்புவந்து அங்கேயே மரணமானார்.

வவுனியா மாவட்ட பதில் நீதிபதி திரு.ஆர் வி. வில்வராசா முன்னிலைல் மரண விசாரணை நடைபெற்றது.

பிரேத பரிசோதனை வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.நிரஞ்சன் மேற் கொண்டார்.

இவரது பூதவுடலுக்கு வவுனியா பொலிசாரும் பொது மக்களும் அஞ்சலியை செலுத்தினர்.

[இ]

# கடற்றெழிலாளர் சங்க கூட்டம்

(கரவெட்டி)

பச்சிலைப்பள்ளி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் இமமாதம் 18ம் திகதி சனிக்கிழமை தாளையடி றே க,பாடசாலையில் நடைபெறவுள்ளது

தலைவர் திரு. கொ, அ. ஸ்ரனீஸ்லாஸ் தலைமையில் நடைபெறும் இப்பொதுக் கூட்டத்தில் பருத்தித்துறை எம். பி திரு, கே. துரைரத்தினம் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. எம். தம்பிமுத்து யாழ். கூட்டுறவு தலைமைக்காரியாலய பரிசோதகர் திரு. எஸ் எஸ் செபரத்தினம் யாழ் மாவட்ட கடற்றொழில் விரிவ ச்க உத்தியோகத்தர் திரு எஸ். வேலாயுதம் பரந்தன கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு என். நிததியானந்தன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். (இ)

# இலங்கைடெஸ்ட் வீரர்களுக்கு

## சென்னையில் பலத்த பாதுகாப்பு

சென்னை, செப். 12

இந்தியாவில் சுற்றுப்ப'யணம் செய்யும் இலங்கை கிரிக்கட் குழுவினர் சென்னையில் இந்தியக் கோஷ்டியுடன் டெஸ்ட் போட்டியில் கலந்து கொள்ள சென்னை வரும் போது அவர்களுக்கு பலத்த பாதுகாப்பு ளிக்கப்படும் என தமிழ்நாடு பெ லிஸ்மா அதிபர் திரு. மோகன்தாஸ் உறுதி அளித்துள்ளார்.

இலங்கையில் சிறையிலிருக்கும் குட்டிமணி, ஜெகன் ஆகியோரை விடுதலை செய்யுமாறு கோரி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதும் இக்கோரிக்கையை முன்வைத்து தமிழ் நாட்டில் ஊர்வலங்கள் நடத்தியதும் தெரிந்ததே. இந்நிலையில் இலங்கை வீரர்களுக்கு ஆபத்து ஏதும் ஏற்படுமென்று கருதியே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

## பொருட்காட்சி

[அரியாலை]

நல்லூர் பரிசுத்த யாக்கோபு ஆலயத்தின் வேதாகமப் பாடசாலையில் கல்வி கற்கும் பிள்ளைகளின் பொருட்காட்சியையும், சித்திரக் கண்காட்சியையும், சபைக் குழுவும் யாழ்ப்பாண அர்ச். டீக்கனுமாகிய அருட் திரு. சாம்டி ஹோர்சிங்டன் அடிகளார் திறந்து வைத்தார்,

ீதவாலயத்தில் நடைபெற்ற திருவிருந்தாராதனையை தொடர்ந்து நடைபெற்ற தேநீர் விருந்துபசரணையின் பின்னர் இக்காட்சியை ஆலய ஜெபமண்டபத்தில் அடிகளார் திறந்து வைத்தார். பெருந்தொகையானோர் இதனைப் பார்வையிட்டனர்

## சுய உதவி வீடமைப்புத்திட்ட வேலைகள்

[வேலணை]

சுய உதவி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் சூரியவந்தையில் ஆரம்பிக்கப்படவிருக்கும் வீட்டுததிட்டத்தின் வேலை ள் யாவும் வெகு விரைவில் தொடங்கப்படவிருப்பதாகவும், இதற்கான மதிப்பீடுகள் யாவும் முடிவுற்றுள்ளன.

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ, சி. நாகராசாவின் மேற்பார்வையின் கீழ் இவ்வேலைகள் நடைபெறவிருக்கின்றது'


ராஜா (யாழ. நகர்) 4 காட்சிகள்
பிரதாப்-ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6–15, 9–30
சனி, ஞாயிறு 2–30
13–9–82 வரை
தனிமரம்

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி
[யாழ்ப்பாணம்] 10–30, 2–15, 4–45, 7–15, 9–30
DEATH DIAMENTIoN

றீகல் Daily 5 Shows
[யாழ்.நகர்]
14–9–82 வரை
Clint Eastwood in
OUILAW
JOSSE WALES

சாந்தி [யாழ்.நகர்] 11—13
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். சரோஜாதேவி
பெற்றால்தான் பிள்ளையா
(புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை

ராணி (யாழ் நகர்) 1 0 வது வாரம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
13 — TO — 14
10-30 A.m , 2–15, 4–45, 7–00, 9–30
William Shatner in
STAR TREX
(Scope—Coior)

5-வது வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்.நகர்)
வாழ்க்கை என்னும் பாலைவனத்திலே பசுஞ்சோலையாக விளங்கும் 'கீதா'வை, அவளின் தியாக உணர்வினை இன்றே காணத்தவறாதீர்கள்.
பெண்களுக்கோர் திலகமாக, பிறரின் வாழ்க்கை மலர்ச்சிக்காகத் தன்னையே அர்ப்பணிக்கத் துடிக்கும் தெய்வமாக விளங்கும் கீதாவை அவளது வாழ்க்கையின் முடிவினை – கண்ணீர்க் காவியத்தை இன்றே காணத் தவறாதீர்கள்!
பாலைவனச்சோலை
(கலர்)


## இன்றைய பலன்

ஆவணி மாதம் 28–ம் திகதி

திங்கட்கிழமை

(13—9—82)

மேடம்: பணத்துடன் பழகுபவர்கள் மிகவும் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும் திருடர் பயத்துக்கு இடமுண்டு. இனிக்கப் பேசுபவர்களை நம்ப வேண்டாம், கடமையில் அதிக கவனஞ் செலுத்தவும்.

இடபம்: புதிய வழிகள் மூலம் பொருள் வரவுக்கும் இடமுண்டு. சிலருக்குபதவியில் உயர்வு கிடை ககலாம், குடும்பத்தில் இனிமை தழுவும். பிள்ளை ஒன்றின் கல்வியில்அதிக கவனம் செலுத்த நேரிடலாம்

மிதுனம்: பல வழிகளிலும் பணம் செலவாகும். நண்பர்கள் சகவாசத்தால் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரிடும். நடுநிலைமை நன்று.

கடகம்: முன்னேற்றம்தடைபடும். குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தும் எதேச்சாதிகாரப் போக்கால் சிலரைப் பகைத்துக் கொள்ளவும் நேரிடும்.

சிங்கம்: பேச்சு வன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள். கல்வித் துறையில் திருப்திகரமான முன்னேற்றம் உண்டு. சிலருக்கு அதிர்ஷ்ட லாபமும் கிடைக்கலாம்.

கன்னி: குடும்பத்தில் சிறு பூசல் தலைதூக்கும். பெரியவர் ஒருவருடன் அபிப்பிராயபேதம் தோன்றக்கூடும். ஆத்திர உணர்ச்சியால் மோதல்கள் ஏற்படும்.

துலாம்: ஒளிபரப்பும் வாழ்க்கை. உறவினர் மத்தியில் ஒற்றுமை மலரும். எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம். தாய்வழிச் சுகமும் உண்டு,

விருச்சிகம்: நீண்டநாள் கனவு இன்று நினைவாகும். தொழில் வேட்டையில் இன்று வெற்றி கிடைக்கலாம். அரசாங்க ஊழியர்களாயின் பதவி உயர்வுக்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தனு: துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். சிறிய தலையிடிக்கு இடமுண்டு. புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும். பிரயாணத்தை பின்போடுவது விரும்பத்தக்கது,

மகரம்: கவர்ச்சிகரமான தினம். காதலர்கள் இன்பத்தில் மிதப்பர். கரும்பு போல் வாழ்க்கை இனிக்கும். களஸ்திரவழியால் சுகம் கிடைக்கும். செல்வாக்கு மேலும் சிறப்படைய இடமுண்டு.

கும்பம்: முக்கியமான விடயங்களை இன்று பின்போடுவது விரும்பத்தக்கது' உள் வீட்டிலேயே உளவு வேலை நடைபெறலாம். பகைவர்களின் நடவடிக்கைகளில் இறுதிவரை பரமரகசியமாகவே இரு.

மீனம்: புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும் ஏழைகட்கு இரங்குவதில் முன் நிற்பீர்கள், தெய்வ குரு பக்திக்கும் இடமுண்டு. மற்றவர்கள் உங்களை பின்பற்றக் கூடிய சூழ்நிலை உருவாகும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# "நெடுந்தீவின் சுபிட்சத்திற்கு மக்கள்ஒற்றுமை அவசியம்"

--உ. அ. அதிபர்

(நெடுந்தீவு)

"எவ்வித மானியங்களுமின்றி இதுபோன்ற பாலர் பாடசாலைகளை நடாத்துவது மிகவும் சிரமமானது. எனினும் இப்பகுதி மக்கள் தமது குழந்தைகளின் நலனில் அக்கறைகொண்டு தம்மால் முடிந்த உதவிகளைவழங்கி இந்தப்பாடசாலையைத் தொடர்ந்து 10 வருடங்கள் சிறந்த முறையில் நடாத்திவருகின்றனர். என்றால் கல்வியின் முக்கியத்துவத்தை மக்கள் உணர்ந்துள்ளார்கள் என்பதே கருத்தாகும். நெடுந்தீவு மக்களின் சுபிட்சத்துக்கு இது போன்ற ஒற்றுமை அவசியமாகும்" என்று நெடுந்தீவு குருநகர் சென். அன்ரனிஸ் பாலர்பாடசாலையின் 10–வது ஆண்டுநிறைவுவிழாவில் உரையாற்றிய நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் கூறினார்.

திரு. ஜே க. மதியாபரணம் தலைமையில் நடைபெற்றமேற்படி விழாவில் நெடுந்தீவு கிழக்குக்கிராமோதய சபைத் தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் பேசும்போது வளர்ச்சியை எதிர்நோக்கியிருக்கும் நெடுந்தீவு போன்ற வசதி குறைந்த கிராமங்களுக்குத் தொண்டாற்றுவதில் பொதுத்தாபனங்கள் தீவிரகவனம் செலுத்தவேண்டும நெடுந்தீவைப் பொறுத்தவரை குருநகர்ப் பகுதியில் உள்ளமக்கள் தமது சமுதாயத்தின் உயர்வில் நாட்டம்கொண்டுள் ள துடன் கலைநிகழ்ச்சிகளிலும் இத்தீவகத்தின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடுபவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு எவ்வாறு உழைக்கவேண்டும் என்பதை இந்த மக்களிடமிருந்து கற்றுக்கொள்ளக் கூடியதாயுள்ளது என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் செ. மகேசு க. சதாசிவம், வே. சுந்தரலிங்கம், க. அமிர்தநாதர் ஆகியோரும் உரையாற்றினர்கள் நெடுந்தீவு நிலாஜோதி நாடக மன்றத்தின் சார்பில் மேற்படி விழாவில் விசேஷ கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (அ)

# விசுவநாதன் நினைவு மண்டபம்: அரியாலை தெ. ப. சங்கம் நன்கொடை

(அரியாலை)

அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கத்தின் சார்பில் திரு. அ விசுவநாதன் ஞாபகார்த்த மண்டப அமைப்புக்குழுவினரிடம் மூவாயிரத்து அறுநூறு ரூபாவுக்கான பணமுடிப்பு வழங்கப்பட்டது.

பணமுடிப்பைக் கையளித்த யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. சி. வேலாயுதபிள்ளை பேசுகையில், அமரர் விசுவநாதன் மறைந்த முன்னாள் நிதி அமைச்சர் திரு. என் எம் பெரேராவிடம் வடபகுதியில் சீவல் தொழிலாளர்களது அவலநிலை பற்றி எடுத்துக் கூறியதன் பயனாக இத் தொழில் கூட்டுறவுமுறையில் அமையும் வாய்ப்புப்பெற்றது என்றும், இப்படியான கூட்டுறவுமுறை வடபகுதியில் ஏற்பட்டிருக்காவிட்டால் இச் சமுதாய மக்களின் பொருளாதார அமைப்பு ஏற்பட்டிருக்க முடியாதென்றும் அவரது பகுதியில் அமைந்திருக்கும் இச்சங்கம் மட்டுமல்ல மற்றைய பகுதிகளிலிருக்கும் ஏனைய சங்கங்களும் அவரது பெயரால் அமைக்கப்படவிருக்கும் இந்த மண்டபத்திற்கு நிதியுதவி புரிய ஆவன செய்யுமென்று தெரிவித்தார்.

சங்க மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்திற்கு தலைமைவகித்த சங்கத் தலைவர் திரு. த, சிவலிங்கம் பேசுகையில், சிறுபான்மைத் தமிழ் மக்களின் விடிவெள்ளியாக அமரர் விசுவநாதன் விளங்குகிறார் என்றும். சீவல்தொழிலை இலங்கையில் தேசியதொழிலாக்கக் கூட்டுறவுமுறையில் சேர்த்துத் தொழிலாளர்களும் அவர்களது குடும்பங்களும, பலவிதமான பயன்களைப் பெறவும்

(8ம் பக்கம் பார்க்க)

## வடஇலங்கை...

[6–ம் பக்கத் தொடர்ச்சி]

வரன், கந்தவனம் வாரணன், இராசநாயகம் ஸ்கந்தகுமார்.

ஐந்தாம்பகுதி

முதலாம்பிரிவு

பிரதானபாடம் 2ம் பாடம்

மி தங்கம் - பாட்டு

f சிவசம்ப துஷ்யந்தன்

இரண்டாம் பிரிவு

கனபதிப்பிள்ளை செந்தில் குமரன், கனகரத்தினம் சிவகுமாரன், ஞானமொழி யோகநாதன்,

சாதாரண சித்தி

தணிகாசலம் பிரபாகரன், நவரத்தினம் சுபகரன், வேலுப்பிள்ளை வதனன், . ரேணுகா வல்லிபுரநாதன், சோமசுந்தரம், நிரஞ்சன் நந்தகோபன், சமரசிங்கம் அருட்செல்வன், இரத்தினசபாபதிக்குருக்கள் மகேசன்.

(தொடரும்)

## "குட்டிமணி, ஜெகன்

# தூக்குத் தண்டனையை ரத்துச்செய்க"

### கம்யூ. (இடது) செயலாளர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

''குட்டிமணி, ஜெகன் ஆகிய இரு தமிழ் இளைஞர்களும் அரசியற் கைதிகள் என்ற வகையில் அவர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை ரத்துச் செய்யப்பட வேண்டும்.''

மேற்கண்டவாறு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் [இடது தேசியக் கமிட்டியின் செயலாளர் திரு. கே ஏ. சுப்பிரமணியம் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் வற்புறுத்தியுள்ளார்.

அவ்வறிக்கையில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது: தற்போது தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள குட்டிமணி, ஜெகன் ஆகிய இரு இளைஞர்களும் தமிழ் மக்களின் விடுதலைக்கென்று பின்பற்றிய கொள்கைகளையும், வழிமுறைகளையும் எமது கட்சி எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதேவேளை வேறுபட்ட கொள்கைகளையும் நடைமுறைகளையும் பின்பற்றும் அரசியல் கைதிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்படுவதையோ அன்றி கொடும் சித்திரவதைகள் பிரயோகிக்கப்படுவதையோ கம்யூனிஸ்டுகளாகிய நாம் எச்சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும். எனவே, அவ்விரு இளைஞர்களுக்கும் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை ரத்துச் செய்யவேண்டும் என எமது கட்சி வற்புறுத்துகின்றது. அத்துடன் விசாரணைக்கு உட்படுத்தாமலும், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமலும் சிறைகளிலும், இராணுவ முகாம்களிலும் அடைத்து வைக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும் எனவும் நாம் வற்புறுத்துகின்றோம்.''

''அரசியல் காரணங்களுக்காகப் பாவிக்கப்பட்டுவரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறையில் இருந்து நீக்கி விடும்படியும் எமது இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி [இடது அரசாங்கத்தை வற்புறுத்துகின்றது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 35 குடிசைகள் தீக்கிரை

சென்னை, செப். 12

கும்பகோணத்தில் இடம் பெற்ற தீவிபத்தொன்றில் 35 குடிசைகள் தீக்கிரையானது. இத் தீவிபத்தினால் 2லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் சேதமடைந்துள்ளதாகவும் கூறப்பட்டது. [வெ]

## கிரிக்கட்: இந்தியா வெற்றி

புதுடில்லி, செப் 12

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே அமிர்தசரஸில் இடம்பெற்ற ஒருநாள் கிரிக்கட்போட்டியில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

## இப்படியும் நடக்கிறது

சிறு கைத்தொழில் திணைக்களத்தின் கீழ் செயல்படும் மரவேலைப் பாடசாலையில் டிப்ளோமா பயிற்சி பெறுபவர்களுக்கான பரீட்சையில் முந்நூற்று ஒன்பது பரீட்சார்த்திகள் தோற்றினர்.

இப்பெரும் தொகையில் தமிழர் – பதினைந்துபேர்தான்!

இப்பதினைந்து தமிழர்களில் சித்தியடைந்தவர்கள்? நான்குபேர் மட்டுமே!

இக்'கதை' இத்துடன் முடிவடையவில்லை!

சிங்களம் தெரியாத காரணத்தினால் இந்த நான்கு பேரும் டிப்ளோமா பயிற்சிபெற அனுமதிக்கப்படவில்லை!

'ஊருவி'

## தியேட்டர் உரிமையாளரிடமிருந்து

# ரூ. 9,000 கொள்ளை!

### மூவருக்கு றிமாண்ட்

[யாழ்ப்பாணம்]

தியேட்டர் உரிமையாளர் ஒருவரிடமிருந்து ஒன்பதினாயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறையிலுள்ள தியேட்டர் உரிமையாளர் முதலாம் காட்சி முடிந்து வீடு செல்லும்பொழுது, மூன்று இளைஞர்கள் அவரை வழிமறித்து 9,000 ரூபா கொண்டு சென்ற கைப்பையைப் பறித்துச் சென்றனராம்.

விசாரணை மேற்கொண்ட வல்வெட்டித்துறை பொலிசார், இந்த வழிப்பறிக் கொள்ளை சம்பந்தமாக மூன்று இளைஞர்களை கைதுசெய்துள்ளனர்.

இந்த மூன்று இளைஞர்களும் நேற்றுக்காலை பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்தபோது இம்மாதம் 21ம் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு, நீதவான் உத்தரவிட்டார். [மா]

## லண்டனில் காலமானார்

யாழ்ப்பாணம்

இலங்கை மின்சாரசபை யாழ். பிரதேச மின் பொறியியலாளர் திரு. சந்திரசேகர் சிவதாசன் லண்டனில் காலமானார்.

லண்டனுக்கு அண்மையில் சென்றிருந்தபோது மாரடைப்பினால் காலமானார் என்றும் இவரது திடீர்மறைவு இலங்கை மின்சாரசபை ஊழியர்களுக்கு பேரிழப்பை ஏற்படுத்திவிட்டதுஎன்றும் மின்சாரஅத்தியட்சகர் திரு.கே நவரத்தினராஜா விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## ரூ. 9000...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினமிரவு இச் சம்பவம் நடைபெற்றது.

திருடர்கள் வீட்டிலுள்ள சைக்கிளையும் எடுத்துச்சென்றனர். சுன்னாகம் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். [மா]

# இ. அ. சங்கத்துக்கு

## கனடா தூதுவர் அன்பளிப்பு

(மாவிட்டபுரம்)

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு கனடாவின் தூதுவர் குளிர்சாதனப்பெட்டி ஒன்றை வாங்குவதற்காக 18,700 ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

சங்கம் சனிக்கிழமைகளில் முன்பு நடத்திவந்த இரவுச்சந்தையை மீன் தட்டுப்பாட்டினாலும், மீனை பேணிவைக்க முடியாமையாலும் நிறுத்தியிருந்தது.

கனடா தூதுவரின் நன்கொடை மூலம் குளிர்சாதனப் பெட்டியொன்றை வாங்கி அதன் உதவியுடன் மீனைப்பழுதடையாமல் பேணி மீண்டும் இரவுச்சந்தை நடத்த வழி பிறந்துள்ளதாக சங்கத்தலைவர் திரு சு. ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்தார்.

இந்த இரவுச் சந்தை விரைவில் மீண்டும் இயங்க ஆரம்பிக்குமெனவும் அவர் தெரிவித்தார். (வெ)

## பத்திரிகைச் சுதந்திரத்திற்கு உத்தரவாதம்

கோலாலம்பூர், செப்.12

''எனது அரசாங்கம் பத்திரிகைச் சுதந்திரத்திற்கு உத்தரவாதமளிக்கும்.''

இவ்வாறு மலேசியாப்பிரதம மந்திரி தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளில் வரும் கண்டனங்களையும் குற்றச்சாட்டுகளையும் வாசித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அவர் தனது அமைச்சர்களைக் கேட்டுக்கொண்டுள்ளார். (வெ)

## அபி. சபைத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலோசிக்கப்படவுள்ளது.

கடந்த 7ம் திகதி நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளதாகவும், அமைச்சர்களின் அதிகாரங்கள் பல அபிவிருத்திசபைகளின் நிறைவேற்றுக் குழுவுக்கு கிடைக்கும் எனவும் பிரதமர் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## விசுவநாதன்....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தொழில்மூலம் பலர் வேலைவாய்ப்புப் பெறவும் அவர் ஆற்றிய பெரும் பணியை நாம் என்றும் மறக்க முடியாதென்று கூறினர். (அ)

## 13 தமிழர்...

(1-ம் பக்கம் பார்க்க)

★ ''வீட்டிலிருந்து தங்களுக்கு அனுப்பப்படும் பார்சல்கள் ஒழுங்காகக் கிடைப்பதில்லை. இப்பார்சல்கள் உடைக்கப்பட்டு சில பொருட்கள் எடுக்கப்பட்டே மீதி கொடுக்கப்படுகிறதாம்.''

இக் கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பெயர் விபரங்கள்

உண்ணாவிரதமிருப்போரின் பெயர் விபரம் வருமாறு:

நடராசா தங்கத்துரை, எஸ் தேவன், சிவபாதம் மாஸ்டர், கந்தையா ராஜேந்திரன், மனோரஞ்சன், எஸ். யோகராசா, பொ. தேவகுமாரன், டி. பாஸ்கரன், தேவானந்த், மகேஸ்வரன், நீதிராசா, சிவசுப்பிரமணியம், பொன்னையா துரைராஜா.

உண்ணாவிரதமிருப்பவர்களை சிரேஷ்ட சட்டத்தரணிகளான எஸ் ஸி சந்திரகாசன், ஸ்ரீநிவாசன், ஜி குமாரலிங்கம், ரி. பாக்கியநாதன், எஸ். பேரின்பநாயகம் ஆகியோர் நேற்றுக் காலை சந்தித்து உரையாடினர்.

இந்த உண்ணாவிரதம் சம்பந்தமாக சிரேஷ்ட சட்டத்தரணிகளான எஸ். உருத்திரமூர்த்தி, வி எஸ். ஏ. புள்ளநாயகம், எஸ். ஸி. சந்திரகாசன் ஆகியோர் இன்று உயர் நீதிமன்றத்திலும், அப்பீல் நீதிமன்றத்திலும் பிரஸ்தாபிக்கவுள்ளனர்.

கடந்த 8ம் திகதி தடுப்பு முகாம் பொறுப்பதிகாரிக்கு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் 27 பேரும் இது சம்பந்தமாக கோரிக்கை விடுத்தும் அவை நிராகரிக்கப்பட்டுள்ளதாம்.

### ஜனாதிபதிக்கு மகஜர்

தடுப்புமுகாமில் வைக்கப்பட்டிருப்போரின் நிலைமை குறித்து ஜனாதிபதி, பிரதிபாதுகாப்பு அமைச்சர் திரு. ரி. பி. வெரப்பிட்டியா, இராணுவ கமாண்டர் பிரிகேடியர் வீரதுங்க, உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. ரி. ஜெயசிங்கா பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான புகார்களை விசாரணை செய்யும் சபையில் இடம் பெற்றுள்ள திரு. சிவா இராஜரத்தினம், திரு. ஜெயமகா ஆகியோருக்கும் இச் சிரேஷ்ட சட்டத்தரணிகள் இது தொடர்பாக மகஜர்களை அனுப்பிவைத்துள்ளனர்.

உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களின் பெற்றோர்களும், உறவினர்களும் ஜனாதிபதி, பிரதி பாதுகாப்பமைச்சர், இராணுவக் கமாண்டர், பிரதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறுகோரி தந்திகளை அனுப்பி வைத்துள்ளனர். [மா–வெ]

## மட்டக்களப்பு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பெறமாட்டாதெனத் தலைவர் அறிவித்தார்.

இதனையடுத்து இவ்விவகாரம் கூட்டணி–ஜனாதிபதி சந்திப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டபோது அரசாங்க சார்பில் வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி மாவட்டசபைக்கு அதிகாரமுள்ளது என அறிக்கை விடுவார் என அறிவிக்கப்பட்டது.

திருமலையில் நடைபெற்ற த.வி. கூட்டணி பொதுச்சபையிலும் இப்பிரச்னைக்கு முடிவு காணும்பொருட்டு அபிவிருத்தி சபையைக் கூட்டுமாறு தீர்மானிக்கப்பட்டது. இதனையடுத்தே இச் சபை இன்று கூடுகின்றது.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யு தேவநாயகம், பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை, அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. க. மாணிக்கம் ஆகியோர் விசேட கூட்டமொன்று கூட்டவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்தனர்.

இருந்தபோதிலும் இக்கூட்டம் அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் நடைபெறும் விசேட கூட்டமல்லவெனவும் ஜூன் மாதம் ஒத்திவைக்கப்பட்ட கூட்டம்தான் இன்று தொடர்ந்து நடைபெறுவதாகவும் சபையின் தலைவர் திரு. சீ சம்பந்தமூர்த்தி எமது நிருபரிடம் தெரிவித்தார். (வெ)


## ஹோம் பிஞன்ஸ் லிமிட்
### (யாழ்ப்பாணம்)

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிஞன்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிஞன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பிஞன்ஸ் லிமிட்
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 8310)

தலைமைக் காரியாலயம்
ஹோம் பிஞன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஆம் செப். மீ 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu — P. O. Box 49 Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.